


# இந்துநாகரிகம்

உள்ளே...


இதழ் ஒன்று — ஆனி 1987


கடவுள் வணக்கம்
தரிசனங்கள்
சித்தர்கள்
கண்ணகி வழிபாடு
இந்துப்பண்பாடு
பத்ததிகள்
வேதாந்த தேசிகர்
தசாவதாரம்
இதிகாசங்களிற் சைவம்
இன்னும் பல


விலை — ஐந்து ரூபா


க. சி. குலரத்தினம்

இந்து நாகரிகத்தில் தாய், தந்தை, குரு, தெய்வம் வழிபாட்டுக் குரியவர்கள். அவர்கள் இந்த வரிசையில் இருந்தவாறே எம்மை வழி நடத்துபவர். தாய் தந்தையைக் காட்டியவர். தந்தை குருவைக் காட்டியவர். குரு கடவுளைக் காட்டியவர். குருபாதம் துணை.



சிவபூமியாகிய இலங்கையின் சிரசாக விளங்கும்
யாழ்ப்பாணத்துத் தலைநகராகிய நல்லூரிலே,
நல்லதொரு சூழலிலே,
திருத்தொண்டர்களுள் தலைவராய
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின்
திருநாமத்தோடு நிலவுகின்ற
ஆதீனத்திலே,
மகாசந்நிதானமாக எழுந்தருளியிருக்கின்ற
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளுக்கு**
வணக்கம்.

சுப்ரமண்யோம்! சுப்ரமண்யோம்! சுப்ரமண்யோம்! என்று மும்முறை ஒலிக்கும் வேதவொலிக்கு வணக்கம். இந்தத் திருநாமத்தையே தமது பெயராகக்கொண்ட பெரியார் திரு. ஆ. சுப்பிரமணியம்.

இவர் பெயரை முன்னிட்ட புத்தகசாலை, தமிழ்ப்பணி புரிகின்றது. அதிபர் சுப்பிரமணியம் என்னைப் புத்தகங்கள் எழுதுமாறு தூண்டியவர். பயிற்சிகள் எழுதுமாறு பழக்கியவர்.

இந்துநாகரிகம் முன்னர் மூன்று பகுதிகள் வெளியிடச் செய்தவர், தொடர்ந்து ஏனைய பகுதிகளைச் சஞ்சிகை வடிவில் வெளியிடுவதற்கு அனுமதி தந்தவர். ஆசி கூறியவர். இன்சொல்லியம்பி, ஈதல் செய்தவர். இவருக்கு வணக்கம். வணக்கம். வணக்கம்.


## ★ இந்துநாகரிகம் ★

*இதன் இதழ்கள் ஒன்றன்பின் ஒன்றாக விரைவாக வெளிவரும்.*
*இதழ்கள் யாவும் சுப்பிரமணியம் அவர்களுக்கே சமர்ப்பணம்.*

பொது சன நூல் நிலையம்
யா. அ. ச. உப அலுவலகம்
அனலைதீவு

உ

# இந்துநாகரிகம்



இன்று நாம் வணங்கும் தெய்வ மூர்த்தங்களுள் முதல் வணக்கம் பிள்ளையாருக்கே உரியதாகிறது. பூசை முறைகளிலும் முதற்பூசை அவருக்கே உரித்தாகி விட்டது. எந்தக் கருமத்தை செய்யத் தொடங்கினாலும் பிள்ளையாரை வணங்கியே செய்கிறார்கள்.

பிள்ளையாரும் எல்லோருக்கும் எளி வந்து எங்கும் எழுந்தருளியிருக்கிறார். அவரை எழுந்தருளச் செய்வதும் மிகச் சுலபமானதாகும். ஒரு நெல்லிக்காயளவு பசுவின் சாணியை, கோமயத்தை எடுத்துப் பிசைந்து உருட்டி வைத்து, அதன் மேல் அறுகம் புல்லையோ, ஒரு பச்சிலையையோ வைத்து விட்டால் பிள்ளையார் எழுந்தருளி விடுவார்.

புலவர்கள் பாடத் தொடங்கும் போதும் முதலில் பிள்ளையார் வணக்கம் பாடுகிறார்கள். நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு, தெருக்கூத்து, கரகம், காவடி முதலிய சனரஞ்சகமான நிகழ்ச்சிகளுக்கு முன் பிள்ளையாருக்கு வணக்கம் சொல்லுகிறார்கள், செய்கிறார்கள்.

"மூத்த கணபதிக்குத் தோத்திரங்கள் சொல்லி
முடியோடு தேங்காயைப் படியில் அடித்து"

என்று நாட்டுப்புற வணக்கம் ஒன்று காற்றில் மிதந்து வந்து காதில் ஒலிக்கிறது. பிள்ளையார், விநாயகர், விக்கினேசுவரர், கணபதி, ஆனைமுகன், ஐங்கரன், பிரணவசொரூபி முதலிய திருநாமங்கள் பிள்ளையாரைக் குறிக்கின்றன.

சிவசக்தி தத்துவத்திலிருந்து முதலில் தோன்றிய ஒலியின் திருவுருவமே பிள்ளையார் என்பர். அவரை ஓங்காரத் திருவருவம் என்பர். அவர் முதலில் தோன்றியவராகையால் மூத்தபிள்ளையார், மூத்தகணபதி, என்றெல்லாம் பெயர் பெற்றார். அவர் பிரணவ சொரூபி. அவரைப் பிரணவானன தேவாய நம; என்று மந்திரநாமாவளி கூறும். பிரணவத்தில் எல்லா மந்திரங்களும் அடங்கும். ஓம் என்னும் பிரணவமே வித்தக விநாயகரின் விமலசொரூபம் என்பர்.

தமக்கு மேல் ஒரு தலைவனில்லாத கணத்தலைவன் கணபதிக்கு விநாயகர் என்பது காரணத்திருநாமம். அவர் சர்வவியாபகமுள்ளவர். தேவர், மனிதர், விலங்கு என்னும் எல்லாப் பிரகிருதிகளும் அவரில் அடக்கம். அவர் எல்லோர்க்கும் பொதுவானவர். அவருக்கு எல்லாத் திருக்கோயில்களிலும் திருவுருவங்கள் உண்டு.

விநாயக வணக்கம் பழைமை வாய்ந்தது. சிலப்பதிகாரத்தில் வரும் கோட்டங்களுள் வெள்ளானைக் கோட்டம், வச்சிரக்கோட்டம் என்பன இரண்டும் இந்திரனைக் குறிப்பனவாகா. வச்சிராயுதக் கோட்டம் இந்திரனைக் குறிப்பதாகவும், வெள்ளானைக்கோட்டம் விநாயகரைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். திருவள்ளுவர் ஆதிபகவன் என்று வணங்கியதும் விநாயகரையாகலாம் எனக் கருதுவாரும் உளர். கணேச புராணத்தில் விநாயகப் பெருமானின் பிரபாவம், வியாபகம் விபரமாக விளக்கப் பெற்றுள்ளன.

மண், நீர், தீ, வாயு, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களின் அதிபதியாய், நிர்க்குணப் பிருமத்தின் வடிவமாய், சகலத்தையும் தம்முள் அடக்கிக்கொண்ட பிரணவமூர்த்தியாயும் கணபதி எழுந்தருளியிருக்கிறார் என்பது காணாபத்தியம் குறித்த சங்கராசாரியர் கருத்து.

"அவ்யாக்ருத ப்ரும்மணோ குணேசஸ்ய சரீரே நாபிர் ப்ரும்மா, முகம் விஷ்ணு, நேத்ரம் ருத்திர, வாமபார்ச்சவம் சக்தி தட்சிணம் சூர்ய, ஆத்மா ஸ்மிதாமய;"

கணபதியின் நாபி பிரமன்வடிவம், முகம் விஷ்ணு, கண் சிவன், இடப்பாகம் சக்தி, வலப்பாகம் சூரியன் என்பது சுலோகத்தின் கருத்து.

### உலகமெங்கும் சிவன்கோயில்கள்

அமெரிக்காவுக்கு வடக்கில் இன்றைய கனடா நாட்டில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் ஒரு சிவன்கோயில் இருந்தது. அந்த இடம் இன்று மண்மேடாகக் கிடக்கிறது. இன்றைய அகழ்வாராய்ச்சியாளர் அதனை ஆராய்ந்து வருகிறார்கள்.

※ வேதம் ஆகமம் என்பனவற்றுள் பேதம் கண்டிலேம் என்று நீலகண்ட சிவாசாரியர் அருளியுள்ளார்.

★ எல்லோரினும் மேலாகக் கடவுள் ஒருவர் இருக்கிறார் ★

உ

# தீக்கடவுள்

## (அக்கினி தேவன்)

### அரவிந்தமகரிஷி அருளியது

**வ**லியவனாகிச் சுடர் வீசிக்கொண்டு நிற்கும் அக்நி தேவனைப் பற்றிய மந்திரங்களிலே கவிதை மிகவும் செழிப்புற்றிருக்கிறது. சூக்குமப் பொருள் ஆழ்ந்து நிற்கிறது. தெய்வநெறி தெளிந்து நிலவுகிறது. பாட்டுக்கொள்ளுகிற அக்நிதேவனுடைய தழலும், அவன் உறுமுதலும் ஒளியும் பாடுகிற ரிஷிகளின் அறிவிலே தாவிவிட்டன போலும். அங்கே அவற்றின் களி தழல் கொண்டெரிகிறது.

ஆம், உயர்ந்த கவிதையின் நெறியே அது. கவியின் இஷ்டதேவதை அல்லது இஷ்டசித்தி, இஷ்டதருமம், இஷ்டசுகம், இதனுடைய காந்தி அவனுடைய உள்ளத்திலே வீசும். அந்த ஒளி பாட்டிலே தெரியும். உயர்ந்த கவிதையின் நெறி அது. அக்நிவிஷயமாக ரிஷிகள் சொல்லியிருக்கும் மந்திரங்கள், சித்திரங்கள், காட்சிகள் அருமையானவை.

### தீ என்பது ஞானசக்தி

தீயே! நீ தேவர்களில் முற்பட்டவன், முன்னோன். தலைவன். மறைந்திருக்கும் முதற்கடவுளுடைய வடிவத் தழலை, அதன் வலியை, அதன் திறமையை அக்நி என்று வாழ்த்துகிறோம்.

அவன் வையத்தின் படிகளை அமைக்கும் பொருட்டு வருகிறான். அவற்றுள்ளே இரகசிய தேவதையாக வீற்றிருந்து நடைகளையும், செயல்களையும் தூண்டுகிறான்.

எல்லா வகைப்பட்ட செய்கைத் திறமை, உயிர் வலிமை, வடிவழகு, ஒளித்திகழ்ச்சி, அறிவு, பொலிவு, மாட்சி இவையனைத்தும் அக்நிதேவனின் விளக்கங்கள். அவனுடைய சத்தியம் மோனநிலையிலே நின்று அவனைச் செயலிலும் கிளர்ச்சிகளிலும் நடத்துகிறது.

அவன் கை வைத்த பொருள்களையெல்லாம் பரிசுத்தப்படுத்துகிறான். வையத்திலே தத்தளித்துக் கொண்டிருக்கும், உயிர்களை இருளிலிருந்து ஒளியிலே கொண்டு சேர்க்கிறான்.

வெப்பத்திலும், தொல்லையிலும் இருந்து உபசாந்தியிலும் ஆனந்தத்திலும் கொண்டு நிறுத்துகிறான். நிற்க அந்தக் காலத்திலே வீடுகள் தோறும் நெருப்பு வளர்த்து அதிலே தெய்வத்தைக் கண்டு தொழுதார்கள். அக்கினி பூசையினால் வீடு விளக்கம் பெற்றது. அடுப்படியில் நெருப்பு அணையாமல் இருந்தது. நீறு பூத்தநெருப்பு. அடுப்படி நாச்சியார் இடைக்காலத்தில் வழிபாட்டுக்குரியவளாய் இருந்தாள்.

வேதசிரசு என்றும் வேதாந்தம் என்றும் வழங்கும் உபநிடதங்களுள் முதலில் வைத்தெண்ணப் பெறுவது ஈசாவாஸ்யோப நிஷதம். அதன் இறுதிச்சுலோகமாய பதினெட்டாம் சுலோகத்தில் அக்கினியைக் குறித்துப் பாடுகிறார்.

"ஓ அக்கினி, நெருப்புத் தெய்வமே, எங்களின் எல்லாச் செயல்களையும் அறிகின்றதேவா. எங்களை நல்ல பாதையின் வழியாக இறுதிப் பேரின்பத்துக்கு அழைத்துச் செல்வீராக. வஞ்சகம் நிறைந்த பாவத்தினின்றும் எங்களை விடுவிப்பீராக. நாங்கள் தேவரீருக்கு எண்ணிலாப் பிரார்த்தனைகளையும் வணக்கங்களையும் அர்ப்பணமாக்குகின்றோம்.

ஒருவர் இறக்குந் தறுவாயில் இச்சுலோகம் படிக்கப்பெறுவது பெருவழக்கு. இங்ஙனம் படித்தலைத் திருப்புப்படித்தல் என்று தமிழில் வழங்குவர். தமிழர் திருமுறைகளைப் பாடுதல் வழக்கத்தில் உள்ளது.

பதினேழாம் சுலோகத்தில் இந்த உடல் அக்கினியின் தொடர்பால் சாம்பராய்ப் போகட்டும் என்றும், இவ்வுயிராய ஆன்மா எங்கும் வியாபித்துள்ள அமர நிலையில் நுழைவதாக என்னும் கருத்துத் தொனிக்கிறது. "போக்கு வரத்து இல்லாத நல்ல மார்க்கத்தை நல்ல வழியால் அடைவி என்று தீக்கடவுளை நயமாக வேண்டுகிறார் மகரிஷி."


# இந்துநாகரிகம்

**பு**ண்ணிய பூமியாகிய பரத கண்டத்திலே, மலைகளிற் புனிதமான இமயத்திலிருந்து பாயும் நதிகளிற் புனிதமாய கங்கைக் கரையிலே, நகரங்களிற் சிறந்த காசி என்னும் சிவத்தலத்திலே, மாளவியா என்னும் பெரியார் இந்துப்பல்கலைக்கழகம் அமைத்த வேளையிலே பண்டிதர்களும் ஞானிகளும் உரையாற்றிச் சிறப்பித்து வாழ்த்தினார்கள்.

வேதவிற்பன்னர்கள் பலர் பேசிய கூட்டத்திலே, மெய்ஞ்ஞானம் கைவந்த விஞ்ஞானப் பெரியாராய செகதீசசந்திரவசு என்பார் செய்த உபந்நியாசம் மாண்புடையது என்பர். அவர் பேசிய கருத்துரையின் முடிவுரையை மகாகவி பாரதியார் அருமையாக மொழிபெயர்த்து ஞானபானு என்னும் பத்திரிகையில் 1912ஆம் ஆண்டில் வெளியிட்டிருந்தார்.

"இந்துநாகரிகத்திற்குள்ளேயே ஒரு விசேஷ சக்தியிருக்கிறது. காலத்தின் அழிவுகளையெல்லாம், உலகத்திலேயுள்ள பொருளனைத்தையும் சிதைவுபடுத்த வரும் மாறுதல்களையெல்லாம், இந்தச்சக்தியினாலே நமது நாகரிகம் எதிர்க்கவல்லதாயிற்று.

எகிப்து தேசத்திலேயும், அசிரிய தேசத்திலேயும், பபிலோனிய தேசத்திலேயும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே, பெரிய பெரிய அறிவுப்பயிற்சிகள் தோன்றி வளர்ந்ததையும், மாறியதையும், மறைந்ததையும், நமது மகத்தான இந்துநாகரிகம் பார்த்துக் கொண்டிருந்தது. அப்போதுகூட நமது நாகரிகம் அளவிடமுடியாத பழைமை கொண்டதாக விளங்கிற்று. அந்தநாளிலே பாரதமாதா தனக்கு அழிவில்லை என்ற தீரபக்தியோடு விளங்கினாள். இன்றும் இளமையோடிருக்கிறாள். இனி, எதிர்காலத்திலும் அழியமாட்டோமென்கின்ற தீராத பக்தியிலே உறுதிகொண்டிருக்கிறாள்.



## மித்திரன் என்னும் சூரியபகவான்

### ஞாயிறு வழிபாடு

(மித்திரதேவனை விசுவாமித்திரரிஷி பாடியவை.)

சூரிய பகவானிடமிருந்து பெறும் ஞானக்கேள்வி தொழில் செய்பவரைத் தாங்குவது, இன்பங்களை வென்றுதருவது, உண்மையுடையது, ஒளிப்புதுமைகள் வாய்ந்தது. அதனை வாழ்த்துகிறோம்.

மித்திரன் அறிவிலே மேம்பட்டு மாந்தரை நடத்துகின்றான். மித்திரன் மண்ணையும் விண்ணையும் தாங்குவோன். மித்திரன் உயிர்களை இமைகொட்டாமல் பார்த்துநிற்கிறான். அந்த உண்மைக் கடவுளுக்கு நெய்யொளி கொண்ட உணவு படைப்போம்.

காலை சந்தியாவந்தனத்தில் ஞாயிறு வழிபாடு சிறந்தது. சூரியன் பரமாத்மாவின் ஞானவொளி. இவன் நான்கு அம்சங்கள் உடையவன். மித்திரன், வருணன், அர்யமான், பகன். இவர்களுள்ளே மித்திரன் ஒளியின் அன்பைக் குளிப்பவன், வருணன் அதன் எல்லையற்ற தன்மையைக் குளிப்போன். அர்யமான் வலிமையைக் குளிப்போன். பகன் ஒளியின் இன்ப உணர்ச்சியாக நிலவுபவன்.

அன்பு இல்லாவிட்டால் வாழ்க்கை நடைபெறாது. வானமும் இயலாது. அன்புதான் இவ்வுலகமுழுவதையும் சிதறாதபடி ஆதரிப்பது. அன்பு ஒருகணம் கண் மூடிவிடுமானால் உலகமும் உயிர்களும் அழிந்துபோய் விடும்.

#### நெய்யொளி

நெய்யொளி என்பது ஞானத்தெளிவு. அதுவே தேவர்களின் உணவு. நெய்யொளி கொண்ட சரஸ்வதி என்பது வேதம்.

## வாயுதேவன்

### காற்று - உயிர்

(மதுச்சந்தர் என்னும் தேனிசை முனிவர் பாடியது)

காற்றே வா. காட்சியுடையாய். இங்கு உனக்காகத் தேன் புனைந்து வைத்திருக்கிறோம்.

உயிரே. மந்திரங்களால் உன்னைத் துதிசெய்கின்றனர். உயிரே நிறைவு தரும் நினது இன்ப ஓடை வேள்வி தருவோனை நோக்கிப் பாய்கிறது. அது தேன் பருகுமாறு விரிவுகொண்டது.

## மருத்துக்கள்

மருத்துக்கள் புயற்காற்றின் தேவர். இவர் எங்கள் அறிவொளியை மூடும் இருள்களையெல்லாம் சாடிப் புடைத்துக் குத்தியொழித்துவிட்டு, வானமழையையும் ஒளியையும் பெறும்படி செய்வர். மருத்துக்கள் இருளையொழிப்பவர். நல்லவரைக் காப்பவர். உள்ளத்திலே உண்டாகும் உக்கிர வேகங்களை ஆட்டிவைப்பவர். வேகங்கெடுப்பவர். இவர்கள் காவல், இன்பம், உண்மையறிவு தருபவர். இவர்களைக் கண்ணுவரிஷி பாடியுள்ளார்.

தொழில் செய்யும் வீரம் உமக்கே ஆகுக. பகைவரைக் கடித்துண்பீர். விரிவுடைய ஆற்றல் உமக்கேயாம். வாரீர் மருத்துக்களே. உமது முழுக்குலத்துடனே வருவீராக!


## மருத்துக்களை வரவேற்று கோதமர் என்னும் ரிஷி பாடியவை

பழைய உலகத்தை மாற்றிப் புதிய உலகம் செய்வதும், பழைய காட்டை அழித்துப் புதியகாடு தோற்றுவிப்பதும், பழைய அறிவை நீக்கிப் புதிய அறிவு கொடுப்பதும் மருத்துக்களின் தொழில், அவர்களின் தேர்களில் மின்னலும் நல்ல பாட்டும் வேலும் கொண்டு வருகிறார்கள். மின்னலாலும் வேலாலும் பழைமையை அழித்து, நல்ல பாட்டினால் புதுமை பிறக்கும்படி செய்கிறார்கள். மருத்துக்கள் நல்ல மாயைகளையுடையோர். நல்ல மாயைகளைத் தேவ மாயைகள் என்பர்.

மனிதருக்காக மருத்துக்கள் அஞ்ஞானம், அகங்காரம் ஆகிய மலைகளை அசைக்கிறார்கள். கிணறு நீர் தருவது அமரவாழ்வு. அதில் ஊறிவரும் நீர் அமிர்தம். கிணற்றைப் பயன்செய்தல் ஆணவத்தை நீக்கியமை போலாகும். கோதம முனிவரின் இந்தப்பாட்டை அநுபூதிரசம் எனப் போற்றுவர். கோதமர் உலகத்தவரின் அஞ்ஞானம் நீங்குமாறு பாடினார்.

✼ இறைவன் பூதங்கள்தோறும் நிற்பவர். பூதங்கள் மண், நீர், தீ, காற்று, ஆகாயம். காற்றில் சப்தம், ஸ்பரிசம் உள்ளன. காற்று இறைவனின் அட்டமூர்த்தங்களில் ஒன்று. அட்ட மூர்த்தங்கள் மண், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன் ஆன்மா.

**கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுவதே பிறப்பின் நோக்கம்**



# கோபுர தரிசனம்

இன்று பெரிய திருக்கோயில்களின் வாசல் முகப்பில் இராசகோபுரம் என்னும் அமைப்பு, ஆழம், அகலம் உயரம் கொண்டதாய், தூரத்தில் வருபவரும் கண்டு தொழும் வகையில் தூலலிங்கமாய் விளங்குகிறது.

மிகப்பழைய காலத்தில் மரத்தாலும் மண்கட்டியாலும் ஆன கோயில்களில் மூலத்தானத்துக்கு மேலே எழுந்த விமானம் என்னும் அமைப்பே கலசந்தாங்கிய உயர்ந்த கட்டடமாக திகழ்ந்தது.

இன்று திருக்கோயில்களுக்குச் சிறப்பு அம்சமாக அமையும் கோபுரங்கள் கண்ணுக்கும் கருத்துக்கும் பெருவிருந்தாய், கலைகளின் இருப்பிடமாய், கலாசார விளக்கமாய், பல்லாயிரவர்க்குத் தொழில்வாய்ப்புக் கொடுத்த அமைப்பாய், பக்தியைத் தூண்டும் பார்வைக்கினிய பக்திக்குவியலாயுயர்ந்திருக்கின்றன, கோபுரத்தைத் தரிசித்தல் கோடிபுண்ணியம் என்றும், பாபவிமோசனம் என்றும் பக்தர்கள் நம்புகிறார்கள்.

"கால்களாற் பயனென் — கறைக்கண்டன் உறைகோயில், கோலக் கோபுரக் கோகரணம் சூழாக் கால்களாற் பயனென்" என்று திருநாவுக்கரசு நாயனாரின் பக்திப்பாடல் பாடும் வகையில் கோபுரம் என்னும் அமைப்பு கி. பி. 650ஆம் ஆண்டுக்கு முன்னரே உண்டாகிவிட்டது எனலாம்.

இன்றுள்ள மிகப்பழைய கோபுரம்காஞ்சி கைலாசநாதர் கோயிற் கோபுரம் என்பரி. பின்னர் பல்லவர் சோழர், பாண்டியர், விஜயநகர மன்னர், பெருவள்ளல்கள் பெருங்கோபுரங்களைக் கருங்கல்கொண்டும் கட்டியிருக்கிறார்கள். கலைகள்ததும்பக் கட்டியிருக்கிறார்கள். இறைவனின் திருவிளையாடல்களின் சித்திரப் பொலிவு நிரம்பக் கட்டியிருக்கிறார்கள். இன்றைய கோபுரங்கள் மிகவுயர்ந்தனவாகலின் பத்துமைல் தூரத்துக் கப்பாலே வரும் பக்தர்களின் கண்களைக் கவர்கின்றன. "கோபுரந் தெரியக் கண்டேன்" என்று கூறியவாறு பக்தர்கள் கோயிலை அடைகிறார்கள். தரைமீது போவோருக்குக் கலங்கரை விளக்கமாக அவர்களை வாருங்கள் என்று அழைப்பனபோல வானமளந்து நிற்கும் கோபுரத்துக்குக் கைகூப்பி வணக்கஞ் செய்துவிட்டு ஆலயதரிசன வேலையைத் தொடரலாம் ஆசாரத்தை அநுசரித்தல்வேண்டும். கோயிலில் அடிமைத்திறன் பூணல்வேண்டும். கோபுரம் நமது சிறுமையை எடுத்துக் காட்டுகிறதுதானே! அதை அண்ணாந்து பாருங்கள்.

## பண்டைய இந்தியா

பண்டைய இந்தியா என்னும் பெயரில் இந்திய புதைபொருளாராய்ச்சியாளர் 1946ஆம் ஆண்டில் வெளியிட்ட முதல் மலரில் ஸ்ருவாட் பிகொட் முதலானோர் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார்கள்.

இந்துநாகரிகம் சம்பந்தமாக எழுதுவதற்கு ஏராளமான தகவல்கள் ஆதார பூர்வமாகக் கிடைத்துள்ளன என்பர். இந்தியப் பண்பாட்டை இந்துநாகரிகம் என வெளியுலகினருக்குத் தெரியப்படுத்துவதற்குக் கிடைத்த தெவிட்டாத செய்தி மொஹஞ்சதாரோ ஹரப்பா அகழ்வாராய்ச்சிக் கண்டுபிடிப்பாகும் என்பர். முன்னர் 1921ஆம் ஆண்டளவில் சேர் யோன் மார்ஷல் முதலானோர் கண்டுபிடித்தவற்றின் மேலாக, வேறு சிலர் நாளடைவிற் கண்டுள்ளார்கள்.

மொஹஞ்சதாரோ, ஹரப்பா நாகரிக நகரங்கள் என்று தோன்றின, என்று மறைந்தன என்பன போன்ற தகவல்களை இன்றுவரை எம்மால் அறிந்து கொள்ள முடியவில்லை என்று பிக்கொட் 1946இல் எழுதியுள்ளார். இந்து, பஞ்சாப் சமவெளிகளின் வரலாறு ஆசியாவிலே மிகப் பழைமை வாய்ந்தது. பாரசீகம், மெசொப்பொட்டேமியாவுக் முந்தியவை அவை. இவற்றைவிட மஜூந்தார் என்பார் சிந்து மாகாணத்தில் செய்த ஆராய்ச்சியிற் கண்ட சங்ஹூதரோ நாகரிகமும் உண்டு. இந்த நாகரிகங்கள் பெரும்பாலும் ஒரு முகமாயமைந்தவை என்பதற்கு மட்பாண்டங்கள் உறுதியளிக்கின்றன. இவைபற்றி சைல்ட் என்பார் 1933ஆம் ஆண்டில் ஆராய்ந்துள்ளார்.

ஹரப்பா நாகரிகத்தில் நகர அமைப்பு பலமுறை நடைபெற்றுள்ளன என்பது, படைபடையாகப் பல நகர அமைப்புகள்காணப்பெறுவதால் அறியக் கிடக்கிறது என்பர். இவர்கள் ஆறு பிரதான பண்பாடுகளை அறிந்துள்ளார்கள். அவற்றின் சின்னங்கள், சிதைவுகள், இடுகாடுகளின் எச்சங்கள் யாவற்றையும் நுணுக்கமாகக் கண்டு படம் பிடித்தும், வரைந்தும் காட்டியுள்ளார்கள். ஹரப்பாவில் மஜூந்தார் கண்ட ஜுஹூம் ஜோதரோ என்பது ஒன்று. குள்ளி பண்பாடு வேறொன்று. இங்கே ஹரப்பாவிற் கண்ட பொம்மை வண்டி, சுடுமண்ணாலானது காணப்பெற்றது. அம்ரி என்றும், பாண்டிவாகி என்றும் வேறு பண்பாடுகள் காணப்பெற்றுள்ளன. இவை எல்லாவற்றுக்கும் மூலமாயமைந்தது ஹரப்பா நாகரிகமே தான். இவற்றையெல்லாம் ஹரப்பாவின் குடியேற்றங்கள் என்று ஆராய்ச்சியாளர் பெருவியப்போடு குறிப்பிடுகின்றனர். ஹரப்பாவில் காணப்பெற்ற சுடுமண் விளையாட்டுப் பொருள்கள் ஊதுகுழல் முதலியன எங்கும் காணப் பெறுகின்றன.



உ

# துவாரபாலகர்கள்



"ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே" என்று மெய்கண்டார் அருளியுள்ளார். "திருக் கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச் சிவ னெனவே நினைந்தவர்க்குச் சிவன் உறைவன் ஆங்கே" என்று அருள்நந்திசிவம் விரித்துப் பாடி யுள்ளார்.

இவர்களுக்கு ஐநூறுண்டுகளுக்கு முன்னரே அப்பரும் சம்பந்தரும் நூற்றுக்கணக்கான ஆல யங்களை கண்டு, பதிகங்கள் பாடியிருக்கிறார்கள். அவர்கள் வழியில் சுந்தரர், மாணிக்கவாசகர் பாடி யுள்ளார்கள்.

அடுத்து திருவிசைப்பா, பதினொராந் திரு முறை பாடியவர்கள் பலபதிகங்கள் அருளியுள் ளார்கள்.

இங்ஙனமே வைஷ்ணவ ஆழ்வார்களும் நாலாயிர திவ்ய பிரபந்தங்கள் பாடியருளியுள்ளார்கள். சைவத் திருக்கோயில்கள் சைவாகமங்களுக்கமையவும், வைண வத் திருக்கோவில்கள் வைணவ ஆகமங்களுக்கமையவும் கட்டப்பெற்றவை.

அவை முற்காலத்தில் மரத்தாலும் செங்கட்டிக ளாலும் ஆன அமைப்பின் வேறாய்ப் பல்லவ அரசர்க ளாலும் பிற்காலச் சோழர், பாண்டியர், விஜயநகர வேந்தர் முதலியோராலும் கருங்கற்கொண்டு அமைக் கப்பெற்றன.

அன்று அவர்கள் அமைத்த திருக்கோயில்கள் பன்னூறு ஆண்டுகளாயும் பழுதுபடாமல் பனி, வெயில், மழை, புயல், அந்நியர் படையெடுப்பு முத லானவற்றையும் புறங்கண்டு இன்றும் நின்று நிலைக் கின்றன.

ஆலயங்களில் முற்காலத்தில் இறைவன் எழுந்தருளி யிருக்கும் ஆதிமூலமாய கர்ப்பக்கிருகத்தின் மேலே அழகிய சித்திர வேலைப்பாடுகளமைந்த உயர்ந்த விமா னங்கள் குவிந்த முறையில் அமைந்தன.

பிற்காலத்தில் விமானங்களிலும் பார்க்க நீண்டு யர்ந்த கோபுரங்கள் ஆழம் அகலம் நீளம் உயரம் உள்ளனவாய்ப் பலதளங்கள் அமைந்தனவாய், சித்திர வேலைப்பாடுகளோடு எழுந்தன.

கோபுரங்களுள் முன்னணியில் நீண்டுயர்ந்ததை இராசகோபுரம் என வழங்கும் வரன்முறையும் உண் டானது. கோபுரத்தின் நுழைவாசலில் இருமருங்கி லும் நீண்டுயர்ந்த வாயில் காப்போர் இருவர் இடம் பெறவேண்டும் என்பதும் ஆகமவிதியாயிற்று. அன்றி சில்பசங்கிரகம் என்னும் நூல் துவாரபாலகர்களின் அமைப்பைக் கூறுகின்றது.

சில்பசங்கிரகம் கூறும் துவாரபாலகர் நீண்ட பெரிய கைகளும், குறுகிய இடையும், பரந்த முகமும், கூரிய மூக்கும், அகன்ற வாயும், கடைவாயின் இருபுறமும் பிறை போன்ற துண்ட வக்கிரப் பற்களும் அமைந்த பூத கணங்கள் ஆவர். ஆனால் சாந்தசொரூபிகளாய் இவர் கள் நின்ற கோலத்தில் காவல் புரிகின்றார்கள்.

இவர்களிடம் மழுவாயுதம் அல்லது கதாயுதம் கைவசம் இருக்கும். இவர்கள் ஒருகையின் ஆள் காட்டி விரலை உயர்த்தி, ஏனைய விரல்களை மடக்கி யிருப்பர். இதனால் இவர்கள் மிகவுயர்ந்த சமயக் கருத்தை மக்களுக்கு உணர்த்துவர். அஃதாவது இங்கே எழுந்தருளியுள்ள இறைவன் ஒருவனே. கட வுள் ஒருவரே. உள்ளே பல திருவுருவங்கள் இருக்கு மாயினும் அவை யாவும் ஒருவனையே குறிக்கும். ஒன் றென்றது ஒன்றே என்பது ஒருவிரல் கற்பிக்கும் பாட மாகும்.

இன்னொரு கையின் உள்ளங்கை குவிய விரல்கள் ஐந்தும் உயர்ந்து நிற்கும். அவ்வரிய முத்திரையின் கருத்து, உள்ளே ஆகா என்ன என்ன அற்புதம் அதி சயம் சென்று பாருங்கள் என்று கூறினாற் போல அமைந்ததாகும்.


இங்ஙனம் மீளா அடிமைத்திறன் பூண்டு காவல் காக்கும் இவர்களின் திருநாமம் சண்டன், பிரசண் டன் என்பனவாகும். ஒருசமயம் முப்புரத்தவர் என வழங்கிய தாருகாக்கன், கமலாக்கன், வித்துன்மாலி என்பவர்கள் மூவகை உலோகங்களினால் பறக்கும் கோட்டைகள் அமைத்துப் பிறர்க்குத் துன்பஞ்செய்து வந்தார்கள். சிவபெருமான் திரிபுரங்களையும் எரித்து அசுரர் மூவரை மன்னித்தருளி அவர்களைப் பணி

( 8ஆம் பக்கம் பார்க்க )

★ கடவுள் ஒருவரே, அவர் அருவமாய் உள்ளவர் ★

உ

## அந்தணர்



தூர்மவழி பிசகாமல் எல்லோருக்கும் நன்மை தரும் செயல்களைச் செய்பவராய், இறைவனை முப்போதும் தொட்டுக் கிரியைகள் செய்பவராய், வேதங்கள் வேதாங்கங்கள், ஆகமங்கள், திருமுறைகள், ஒழுக்கநூல்கள் அறிந்தவராய், அடக்கம் உள்ளவராய், இறைவன் கோயிலில் எழுந்தருளியுள்ளார்; வந்து பாருங்கள் வழிபடுங்கள் அருள்பெறுங்கள் என்று வழிபடுத்துபவராய் உள்ளவர் அந்தணர். இவர்களைப் பூசுரர் என்றும் வழங்குவர். இவர்கள் நடமாடுந் தெய்வங்கள்.

அந்தணர் தாம் கற்ற சூத்திரங்கள், சுலோகங்கள் பாடல்களை மறந்திருந்தால் அவற்றை மீள மனப்பாடம் செய்துகொள்ளலாம். ஆனல் ஒருமுறை ஒழுக்கங்கெட்டால், அவர் ஆயுள்பரியந்தம் கெட்டவராக ஒதுக்கப்படவேண்டியவர் என்று திருவள்ளுவர் சட்டம் வகுத்துள்ளார்.

திருவுடையந்தணர்களில் சிவனுறைவர். திருக்கோயில்கள் சிறப்புற நடப்பதற்கு அந்தணர் மூலகாரணம். அந்தணர் தம் கடமையைத் தவறுமற் செய்தால் அவருக்காகவும் மாதமொரு மழைபெய்யும் என்பதை வேதியர்க்கோர்மழை எனவரும் தொடர் வலியுறுத்துகிறது. அந்தணர் அழகிய தட்பத்தையுடையவர். தட்பம் குளிர்ச்சியாய அன்பு.

பழைய காலத்தில் திருக்கோயில்களில் ஆயிரக்கணக்கான அந்தணர்கள் கடமையாற்றினர்கள். அவர்களின் கடமையுணர்ச்சி காரணமாகவே காவல் மன்னர்கள் அவர்களுக்கு வரியில்லாத காணிகளையும் வருவாயுள்ள காணிகளையும் வழங்கினர்கள்.

முற்காலத்தில் விருத்தாசலம், திருச்செந்தூர், சிதம்பரம், சீகாழி, திருவண்ணமலை, ஜகந்நாதம், திருவீழிமிழலை, திருவாலவாய், தண்டகாருண்யம், கோகுலம், பதரிகாசிரமம், சுவாமிமலை என்னும் பன்னிரு தலங்களில் முறையே ஆயிரம் அந்தணர்முதல் பன்னீராயிரம் அந்தணர்வரை வாழ்ந்தனர். தில்லை என்ற சிதம்பரத்தில் மூவாயிரவர் வாழ்ந்தமை உலகறிந்ததே. அந்தணரின் பெருமையைத் திருமூலநாயனர் "அந்தண்மை பூண்ட அருமறை யந்தத்துச் சிந்தைசெய் அந்தணர்" எனப்புகழ்வர். அந்தணரின் செவ்விய சேவை நாட்டுக்குத் தேவை. அவர்களைப் பாதுகாத்தல் மக்களின் கடமை.

## இந்திய மெய்ப் பொருளியல்

அறிவார்வம், வாழ்க்கைக் கோட்பாடு என்றெல்லாம் பொருள் தரும் மெய்ப்பொருளியல் இந்தியாவில் தரிசனங்கள் என வழங்கி வந்தன. பெரிய முனிவர்கள், ஞானிகள் தங்கள் சிந்தனை மூலம் கண்ட முடிபுகள் தரிசனங்களாயின. தரிசனம் என வழங்குபவையும் அறுவகையாக அமைந்துள்ளன. அவை நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை என்பனவாம்.

இவற்றுள் உத்தரமீமாம்சை என வழங்கும் பிரம்ம சூத்திரத்தை ஔவையார் முனிமொழி எனக் கூறினர் எனக் கருத இடமுண்டு. பிரம்மசூத்திரத்தை விளக்கி சிவபரத்துவம் தொனிக்க, சிவாத்துவித சைவபாடியம் ஒன்றுண்டு. அது ஆகமம், திருமந்திரம், தேவாரமாகிய திருமுறைகள் மறைக்கப்பெற்றுற்போல மறைக்கப்பட்டு, மறக்கப்பட்டுக் கிடந்ததும் உண்டு.

இவ்வாறுக பிரம்ம சூத்திரத்தை விளக்குவதற்கு சங்கராசாரியர் அத்வைதக் கோட்பாட்டைப் புகுத்தி விருத்தியுரை எழுதினர். இராமானுஜர் என்பார் விசிட்டாத்துவிதம் என்னும் சிறப்பான அத்வைதம் புகுத்தி விரிவுரை எழுதினர். இங்ஙனமே மாத்துவர் என்பார் துவைதம் என்னும் கோட்பாட்டைப் புகுத்தி விரிவுரை எழுதினர். இன்னும் வீரசைவக்கோட்பாட்டைக்கண்டு ஸ்ரீபதி பண்டிதாசாரியர் என்பார் ஸ்ரீகர பாஸ்யம் என்னும் பேருரை எழுதினர். பாஸ்யம் என்பது தமிழில் பாடியம் என வழங்கும் பேருரையாகும். சங்கராசாரியரின் பேருரையை வடமொழியிலிருந்து கடலங்குடி நடேசசாஸ்திரியார் தமிழில் பெயர்த்துள்ளார். அவருக்கு முன்னர் நீலகண்ட சிவாசாரியரின் சைவபாடியப் பேருரையை எங்கள் குப்பிளான் ஊரினராய காசிவாசி செந்திநாதையர் அவர்கள் தமிழில் தந்துள்ளார்கள். இவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் மாணுக்கராவர்.

---

❊ இசை, நாடகம், நடனம் முதலிய கலைகளிலும் பக்தி கலந்துள்ளது. பண்டிகைகள், திருவிழாக்கள், கொண்டாட்டங்கள், களியாட்டங்கள் எல்லாவற்றிலும் சமய உணர்ச்சி ஊடுருவியுள்ளது.

---

★ **பாரத நாட்டின் கடவுள் கோட்பாட்டை உலகம் ஏற்கிறது** ★

உ

# தரிசனங்கள்

இந்துநாகரிகத்தின் பெருஞ் சிறப்புக்கு அதன் தத்துவ நூற்பெருக்கமும் ஒரு காரணமாகும். தத்துவத்துறையில் தரிசனங்கள் என்னும் தொகுதி அறிவையூட்டும் பெருநூல்களாகவுள்ளன. அவை வேதங்களை அடிப்படையாகக் கொண்டெழுந்தனவாகும். அவை கடவுளின் தத்துவத்தைப் பற்றிக் கூறுவனவாயினும், வேறு பல துறைகளையும் விரித்து விளக்குகின்றன.

பகுத்தறிவாற்றலும் ஆழ்ந்த கல்வியும் கூரிய அறிவுத்திறனும் படைத்த மேதைகளுக்காகவே தரிசனங்கள் செய்யப்பெற்றன என்பர். இதிகாசங்கள், புராணங்கள், தர்மசாஸ்திரங்கள் உள்ளத்தைத் தொடும் வகையில், தரிசனங்கள் அறிவைத் தொடுவனவாகும். அவை வேதங்களை அடிப்படையாகக் கொண்டெழுந்தனவாகலின் வைதிகசாஸ்திரம் எனவும் பெயர் பெறுவனவாகும்.

தரிசனம் என்ற சொல் திருஷ்ட் என்னும் பதத்திலிருந்து பிறந்தது. அதன் பொருள் காட்சி என்பதாம். அதைப் பார்வை என்றும் மானதக்காட்சி என்றும் கூறுவர். அது ஒரு தத்துவமுறை என வழங்கும். மெய்ஞ்ஞானிகள் மெய்ம்மை முழுவதையும் ஒருங்கே பார்த்த பார்வை, அறிவுக்காட்சி என வழங்குகின்றது. அஃது அவர்களின் அநுபவத்திற் கண்ட காட்சியாகும். அஃது ஒருவர் தம்மையும் தம் சூழலையும் அறிவதற்கு முயன்று கண்ட அறிவு நாட்டத்தின் அற்புதப்பயன். அது ஞானவேட்கையால் எழுந்தது என்பர். எதனுல் ஞானம் உண்டாகிறதோ அது தரிசனம் எனப் பெயர் பெறுவதாயிற்று. தரிசனத்தின் துறைகள் பல. அவை ஆய்தரிசனம், ஆக்கதரிசனம் என்னும் இருபெரும் பிரிவுகளில் அடங்கும். அவை விவேகிகளின் அறிவைக் கவரக்கூடிய வகையில் அமைந்துள்ளன. அவை மனக்காட்சிகள் என்னும் அறிவுக் காட்சிகளாகும்.

ஆஸ்திகன் என்பவன் இறப்புக்குப் பின்னரும் வாழ்க்கை உண்டு என்னும் நம்பிக்கை உள்ளவன். இறைவன் ஒருவன் இருக்கிருன், அவன் எம்மை வழி நடத்துகிருன் என்று நன்ருக நம்புகின்றவன். அவன் வேதங்களின் ஆணையில் பூரண நம்பிக்கை உள்ளவன் என்று பெரியோர் கணிப்பர்.

வைதிகதர்மம் என்றும், சனுதனதர்மம் என்றும், இந்துமதம் என்றும் வழங்கும் பாரதநாட்டின் பழைய சமயத்துக்கு தத்துவத்துறை அநுகூலமாயமைந்துள்ளது. சமயத்தைச் சார்வதற்குத் தத்துவத்துறை வழியாக அமைந்துள்ளது. தத்துவஞானத்தைப் பெரியவர்கள் தரிசனம் எனப் பெயரிட்டு வழங்குகிருர்கள். சமயத்தை மதம் என வழங்குகின்ருர்கள். தரிசனம் உள்ளுணர்வு எனவும், மதம் ஆராய்ந்து அறியப் பெறுவது எனவும் கூறுவர்.

வேதங்களிலிருந்து எழுச்சி பெற்றனவாகப் போற்றப்பெறும் ஸ்மிருதிகளில் அடங்கியுள்ள பெருநூல்களில் தரிசனத்தொகுதியும் ஒன்று. இவை வேதங்கள் உயிர்ப்புள்ளவை, என்றுமுள்ளவை என்பதைக் காட்டுவதற்கு எழுந்த நூல்கள் எனப் போற்றத்தக்கவையாகும்.

## ஆறு வழிகள்

பலவகையான பிரமாணங்களைக் கொண்டு எய்தப்பெறும் முடிவுகளுக்குப் பொதுப்பெயர் தரிசனம் என வழங்குகிறது. எனவே பொருள்களைக் காணும் பலவகை வழிகள் மார்க்கங்கள் தரிசனங்கள் என வழங்குகின்றன. இந்திய தத்துவ ஞானத்தில் ஆறுவழிகள் கூறப்பெற்றுள்ளன. அவற்றை ஆறு தரிசனங்கள் என்னும் பொருளில் ஷட்தர்சனுனி என்பர். அவை வெவ்வேருன அறுவகை எண்ணக் கூறுகளாகும். ஒவ்வொரு எண்ணக் கூறும் அதனதன் வழியில் வளர்ச்சியுற்று விளக்கம் பெற்றுச் சீர்மையடைந்து வேதத்தின் பல்வேறு பாகங்களுடன் தொடர்பு கொண்டு விளங்குகிறது. ஒவ்வொரு ஏற்பாட்டுக்கும் அதற்கென்று சூத்திரங்கள் செய்தவர் ஒருவர் உள்ளார். அவர் மாபெரும் ரிஷியென மதிக்கப் பெறுபவர். அவர் செய்த சூத்திரங்கள் சுருக்கமானவை, சாரமுள்ளவை. பெரியவர்களின் உரை விளக்கமின்றிப் பொதுமக்கள் அவற்றை விளங்கிக் கொள்ள முடியாது. எனவே தான் பாஷ்யகாரர் என்னும் உரையாசிரியர்கள் வியாக்கியானங்கள் மூலம் அவற்றை விளக்குவதற்கு முன்வந்தார்கள்.

ஒவ்வொரு தரிசனத்துக்கும் தனித்தனியாகப் பாஷ்யம், விருத்தி, வர்த்திகம், வியாக்கியானம், டீகை, டிப்பணி ஆகிய விளக்கங்கள் அமைவாக உள்ளன. அவை மிகவும் பரந்தவை.

## அறுவகைக் கூறுகளும் அவற்றைத் தந்தவர்களும்

அறுவகைத் தத்துவக் கூறுகளையும் நிரைப்படுத்திக் கூறும் சிலர், அவற்றை சாங்கியம், யோகம், நியாயம் வைசேஷிகம், பூர்வ மீமாம்சை, உத்தர மீமாம்சை, எனக்கூறுவர். சிலர் இவற்றின் நிலையை மாற்றியும் கூறுவர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | நியாயம் | — | கௌதமரிஷி |
| 2. | வைசேஷிகம் | — | கணுதரிஷி |
| 3. | சாங்கியம் | — | கபிலமுனிவர் |
| 4. | யோகம் | — | பதஞ்சலிமுனிவர் |
| 5. | பூர்வமீமாம்சை | — | சைமினி |
| 6. | உத்தரமீமாம்சை | — | வியாசர் |

கௌதம முனிவரை அக்கபாதர் எனவும், வியாசரை பாதராயணர் எனவும் வழங்குவர். உத்தர மீமாம்சையை வேதாந்தம் எனவும் வழங்குவர் ஆறு தரிசனங்களையும் இவ்விரண்டாக இணைத்து வழங்கும் வழக்கமும் உண்டு.

1. நியாயமும் வைசேஷிகமும்
2. சாங்கியமும் யோகமும்
3. மீமாம்சமும் வேதாந்தமும்

(8ஆம் பக்கம் பார்க்க)

**உலகம் முழுவதிலும் முன்னர் இந்துநாகரிகம் பரவி நிலவியது.**

### தரிசனங்கள்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றுள் நியாயம் வைசேஷிகம் என்னும் இரண்டையும் தருக்கம் என வழங்குவர். இவற்றையும் இவற்றின் வழிநூல்களையும் வியாக்கியானங்களையும் நன்குணர்ந்தவராய மகாபண்டிதராய அன்னம்பட்டர் என்னும் தெலுங்கர் ஏறக்குறைய முந்நூறு வருடங்களுக்கு முன் தருக்க சங்ரகம் எனப் பெயரிய ஒருநூலும் அதற்குத் தருக்க சங்கிரகதீபிகை எனப் பெரிய ஒரு வியாக்கியானமும் இயற்றினார். இதனை அன்னம்பட்டீயம் எனவும் வழங்குவர்.

தருக்க சங்கிரகம், தருக்க சங்கிரக தீபிகை என்னும் இரண்டையும் சிவஞானசுவாமிகள் என்பார் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்கள். திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான இவற்றை ஆதீன மகாசந்நிதானம் அவர்கள் வேண்டிக்கொண்டருளியவாறு. யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்கள் பரிசோதித்து அச்சிற் பதிப்பித்து புகழ்பெற்றார்கள். சாங்கிய தரிசனத்தைச் சுருக்கி சாங்கியதத்துவ காரிகா என்னும் நூல் செய்தவர் ஈஸ்வரகிருஸ்ணர். சாங்கியதத்துவ காரிகைக்கு வாசஸ்பதிமிஸ்ரர் சாங்கியதத்துவ கௌமுதி என்னும் உரையை வடமொழியில் தந்துள்ளார். யோகதரிசனத்தை முதலில் தந்தவர் இரணியகர்ப்பர். இதனை சூத்திரவடிவில் தந்தவர் பதஞ்சலி முனிவர். இதனால் இவர் சித்த தோஷத்தை நீக்கியவர் எனப்புகழ்பெற்றுள்ளார்.

(சாங்கியதரிசனம் பற்றித் திருக்கோணமலை விசுவலிங்கம் அவர்களும், தருக்கம்பற்றி அளவெட்டி பொ. கைலாசபதி அவர்களும் அருமையாக ஆய்ந்துள்ளார்கள்.)

## மேற்குத்தேசத் தரிசனங்கள்

இத்தரிசனங்களைக் கருத்தூன்றிக் கற்ற வில்லியம் யோண்ஸ் என்னும் மேற்குநாட்டுப் பெரியார் தங்கள் நாட்டுத் தத்துவங்கள் சில இவற்றோடு தொடர்புள்ளனவாக அமைந்துள்ளன என்று எழுதியுள்ளார். மேற்குத் தேயத்து விற்பன்னர்கள் இந்திய தத்துவங்களை அறிந்திருந்தனர். அந்தமுறையில் யார் யார் எந்தத் தரிசனங்களோடு ஒத்துப்போகின்றனர் என்று வில்லியம் யோண்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

1. நியாயம் — பெரிபடெரிக்கொள்கை
2. வைசேடியம் — ஐயோனிக்கொள்கை
3. சாங்கியம் — இட்டாலிக்கொள்கை
4. யோகம் — ஸ்ரோயிக் கொள்கை
5. மீமாம்சை — பிளேட்டோவின்கொள்கை

இங்ஙனமாயின் கௌதமர் அரிஸ்டோட்டிலையும் கணாதர் தேல்ஸ்சையும், ஜைமினி சாக்கிரட்டீசையும் வாதராயணர் பிளேட்டோவையும் கபிலர் பைதகரசையும், பதஞ்சலி ஜெனோவையும் போன்றவர்கள் என்பர். அறிவாளிகள் ஒரேவழியில் சிந்திப்பதுண்டு. (இவற்றை மெய்யியல்வல்லாரேரடு உசாவி அறிக.)

வேதத்தின் தத்துவப்போக்கு வேதங்களின் இறுதியில் வரும் உபநிடதங்களில் விளக்கப்பெற்றுள்ளன. இவ்விளக்கங்கள் பிற்காலத்தில் தரிசனங்கள் செய்தவரின் சிந்தனையைத் தூண்டின என்பர்.

நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை ஆகிய ஆறு தரிசனங்களையும் தத்துவ தரிசனங்கள் என வழங்குவர். அவை வேதத்தோடு தொடர்புடையன வாதலால் வைதிக தரிசனங்கள் எனவும் வழங்குவன. அவை ஆஸ்திகம் எனவும வழங்குவனவாகும்.

வைதிக தரிசனங்களின் வேறாய் வேதங்களைக்கொள்ளாத தரிசனங்களும் உள்ளன. அவை அவைதிக தரிசனங்கள் எனப்படும். ஜடக்கொள்கையைக் கூறுவனவாய வைபாஷிகம், ஸௌந்ராந்திகம், யோகாசாரம், மாத்யமிகம் என்பனவற்றோடு பிற்காலப் பௌத்தம், சமணம் என்பனவுமாம். இவையாறும் நாஸ்திகம் எனவும் வழங்கும்.

வேதத்தைப் பிரமாணமாகக்கொள்ளும் தரிசனங்களில் சில பொதுத்தன்மைகளில் ஒற்றுமை காண்கின்றனர். அவை உலகம் என்பது ஓர் உள்பொருள், அது மாயையின் காரியம், அதற்குத் தோற்றம் நிலைபேறு அழிவு உண்டு. உயிர்கள் கன்மத்துக்கு ஏற்பப் பல பிறவிகளை எடுத்துவருகின்றன. உயிர்கள் வீடு என்னும் மோட்சத்தை அடைதலே இறுதி இலக்கு. மோட்சத்தை அடைவதற்கு ஞானம் என்னும் நெறி சாதனமாகும்.

---

### துவாரபாலகர்கள்

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டருளினார். இருவரைத் துவாரபாலகராயும் ஒருவனைக் குடமுழா அடிப்பவனையும் கொண்டருளினார். இவ்வாறே தேவியாலயத்தில் பெண்பாலாராகிய ஹரபத்திரா, சுபத்திரா என்போர் நிற்கிறார்கள் விஷ்ணு ஆலயங்களில் ஜயன், விஜயன் நிற்கிறார்கள். இவர்கள் திருமாலின் சங்கு சக்கரம் ஏந்தி நிற்பர்.

திருக்கோயில் எதுவாயினும் அடியார்கள் துவாரபாலகரிடம் உத்தரவு பெற்றே உள்ளே புகுதல்வேண்டும் என்பது சம்பிரதாயபூர்வமான ஒரு விதி. துவாரபாலகர் வணக்கத்துக்குரியவர்களே. இங்ஙனமாக இடம்பெற்ற துவாரபாலகர்கள் கோபுரத் தளங்களிலும் காவல்புரிகிறார்கள். உள்ளே ஆதிமூலத்து வாயிலிலும் அவர்கள் அமைதியாகக் காவல்புரிகிறார்கள்.

---

❊ பாரதநாடு என வழங்கும் இந்தியா இந்துநாகரிகத்தின் உற்பத்தித் தானம். இன்று மேற்கு நாடுகள் விஞ்ஞானத்தின் எல்லையில் நின்றுகொண்டே இந்தியாவின் மெய்ஞ்ஞான மேல்நிலையை அண்ணாந்து பார்க்கின்றன. விரைவில் இந்துநாகரிகம் மேல்நாகரிகமாக மலரப்போகிறது. இதற்குக் காரணம் பழம் பெரும் சமயத்தின் தத்துவக் கோட்பாடுகளேயாம். பாரத நாட்டுக் கோயில்கள் பல கலைகளை வளர்த்த பெருமையைக் கற்களே பேசுகின்றன.

---

**கடவுள் வழிபாடு ஆன்மாவைப் பந்தித்த பாசம் நீக்கும் மருந்து.**

பொது சன நூல் நிலையம்
யா. அ. ச. உப அலுவலகம்
அனலைதீவு

# நந்தி யெம்பெருமான்



திருநந்திதேவர் எனவும் வழங்கும் தெய்வாம்சம் பொருந்திய இவர் பெரியவர். நந்தியென்ருல் மகிழ்ச்சி கரமாய் இருப்பவர் என்பது கருத்து. இவர் பந்த பாசம் நீங்கியவராய், சிவபக்தியில் முற்றி முதிர்ந்தவ ராய், மேலான பதவி பெற்றவராயுள்ள பக்குவான்மா.

சிவாலயத்தில் கொடித்தம்பம், பலிபீடம் என்பன வுக்கு முன்னுல், சுகாசனத்தில் படுத்திருந்தவாறே பரமனிடம் பார்வையைச் செலுத்திய வண்ணம் இருப்பவர். பக்தியையும் அடிமையையும் பிறருக்குச் சொல்லாமலே சொல்லிக் கொண்டிருப்பவர்.

இவர் பெருஞ் செல்வர், தவப்பெருஞ் செல்வர் ஞானச்செல்வர். இவருடைய ஞானம் திருப்பெருகு சிவஞானம். இந்தப் பெரிய ஞானத்தைச் சிவபெரு மானிடம் அவர் தெற்கு நோக்கிய தட்சிணுமூர்த்தி யாய் எழுந்தருளிய போது கேட்டவர். இவர் தென் முகச் செல்வரின் சீரிய சீடன்.

இவர் உருவிற் பெரியவர், வெண்ணிறத்தவர். இவர் தர்மத்தின் சொருபமாயிருப்பவர். இவர் புனி தராய் ஞானவானுய், வலிமை வாய்ந்தவராய்ச் சிவ பக்தியினராய் இருப்பவர்.

திருக்கோயிலில் தினந்தோறும் நடைபெறும் ஆறு காலப்பூசையில் இவருக்கும் இடமுண்டு. இவருக்கும் அபிடேகம், அலங்காரம், தூப தீப வழிபாடு, அவிசு படைத்தல் முதலியன உண்டு.

பிரதோஷ வேளைகளில் இவருக்கு சிறப்பு வழிபாடு நிகழும். இவருடைய இருகொம்புகளுக்கிடையே சதா சிவமூர்த்தமாய சிவலிங்கப் பெருமானைத் தரிசித்தல் பெரும் பேறு.

இவர் வேத்திரப் படைதாங்கியவாறு திருக்கை லாயத்தின் நுழைவாயிலைக் காத்து நிற்பர். தேவாதி தேவர்கள் இவரிடம் அநுமதி பெற்றுப் பணிவன்புட னேயே உள்ளே புகுதல் வேண்டும். அவர்கள் தள் ளுண்டு நெருக்குண்டு நெறி தவறினுல், இவர் அவர் களை வேத்திரப்படையால் தண்டிப்பர்.

இவர் தட்சிணுமூர்த்தியிடம் ஞானம் பெற்ற விசேடத்தினுலே, அகச்சந்தான குரவர்களுள் முதல்வ ராயினுர். இவரிடம் ஞானம் பெற்றவர் பலர். அவர் கள் யாவரும் நந்தியருள் பெற்ற நாதர்கள் என்னும் பெரும்பேறு பெற்றவர்கள். பெருமுனிவரும் நாயனுரு மான திருமூலர் நந்தியருள் பெற்ற நாதர்களுள் தாமும் ஒருவர் என்பர்.

திருச்சிற்றம்பலம்

நந்தியருள் பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றுஇவர் என்னேடு எண்மரும் ஆமே

நந்தி அருளாலே நாதனும் பேர்பெற்ருேம்
நந்தி அருளாலே மூலனை நாடினேம்
நந்தி அருளாவது என்செயும் நாட்டிலே
நந்தி வழிகாட்ட நான்இருந் தேனே

நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றிசெய்து
அந்தி மதிபுனை அரனடி நாடொறும்
சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேனே.

திருச்சிற்றம்பலம்

திருமூலர் தம்மோடொத்த எழுவருடன் எண்ம ராய்த் திருநந்திதேவர் காட்டியருளிய திருநெறியிலே பயின்று வந்தனர். இவர்களுக்கு நாதர்கள் என்னும் பட்டத்தைத் திருநந்திதேவரே கொடுத்தருளினுர்.

இவர்கள் பிறருக்கு வழிகாட்டத் தக்கவர்கள் என்னும் தகுதிச்சான்ருக இப்பட்டத்தை நந்திதேவர் மகிழ்ச்சியோடு வழங்கினுர். நந்தியெம்பெருமான் திருக்கைலைத் திருக்கோயில் முதற்பெருநாயகம்.

# பண்டைய பாரதப் புதைபொருள்

பாரத நாட்டின் புகழ்பூத்த புதைபொருளாராய்ச் சிக்கழகம் 1862ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பெற்று, அதன் நூற்ருண்டு விழா 1961ஆம் ஆண்டின் மார்கழி மாதவிறுதியில் ஏழுநாள்கள் உலகளாவிய நிபுணர்கள் மத்தியில் கொண்டாடப் பெற்றது. ஆராய்ச்சிக்கழ கத்தை நிறுவிய ஆங்கிலேயரின் சூத்திரதாரியாயிருந் தவர் சேர். அலெக்சாண்டர் கணிகாம் என்னும் படைப்பிரிவின் பொறியியலாளராவர்.

நூற்ருண்டுப் பழைமை வாய்ந்த மாநாட்டில் வந்திருந்த நிபுணர் வரிசையில் சேர். மோட்டிமர் வீலர், பேராசிரியர் சங்கிலியா, அகதாகிறிஸ்ரி அம் மையார், ரோல்ஸ்ரோய் என்னும் பெயர் படைத்த குடும்பத்தினர், மலோவன், பிலியோசா, யமமோற்ரே முதலானவராவர். அங்கே காட்சிக்கு வைத்திருந்த பழைய பண்டங்களுள் எலும்பாலான ஆயுதங்கள் பலவாகும். பண்டைக் காலத்து மட்பாண்டங்களோடு, ஹரப்பா நாகரிகத்தோடு தொடர்பு கொண்ட வேறு நகரங்களின் பண்டங்களும் இருந்தன. சில பண்டங் கள் உரோமாபுரியோடுதொடர்புபட்டனவாயிருநதன.

பிரன்ஸ், டென்மாக், யப்பான் நாடுகளிலிருந்து வந்தவர்கள் பண்டைய பாரதத்தின் பெருமையை

( 12 ஆம் பக்கம் பார்க்க)

மருந்தாகிய கடவுள் வழிபாட்டுக்கு அநுபானம், மெய்அன்பு.

உ

# சித்தர்கள்




ஈழத்துச் சித்தர்கள் பற்றி விரிவாக அறிவதன் முன், தமிழ்நாட்டுச் சித்தர்களைப் பற்றிச் சிறிதளவாயினும் அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். சித்தர்கள் என்பார் சிவபெருமானைத் தம் சிந்தையுள் வைத்தவர்கள். அவர்களின் உள்ளத்தில் சிவபெருமான் ஒடுக்கம். சித்தர்கள் சித்துக்கள் கைவரப் பெற்றுப் பல அற்புதங்கள் செய்தவர்கள். செத்தவர் தம்மை எழுப்பித்தரவல்ல சித்தர்கள் வாழ்ந்த தமிழ்நாடு என்று காந்தியக் கவிஞரும் தலைசிறந்த ஓவியக்காரருமான இராமலிங்கம்பிள்ளை பாடுவர். சித்தர்கள் நோயணுகா விதியறிந்தவர்கள். நோய்கள் வந்தால் நீக்குவதற்கு மருந்து கண்டவர்கள். சாதாரண தாவர வர்க்கத்தின் மகிமை பெருமை அருமைகளை அறிந்து அந்தரங்கமாக வைத்திருந்தவர்கள். சிவபெருமானையும் தோழமை முறையில் நட்புரிமையோடு அருகழைத்து உரையாடி மகிழ்ந்தவர்கள். அந்த அற்புதநெறி பற்றி ஆராய்வதற்கு எமக்கு அருகதை இல்லையாயினும் அறிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

தமிழ்நாட்டில் அருள் சுரக்கும் ஆலயங்கள் பலவற்றின் அண்மையில் சித்தர்களின் சீவசமாதி, சிவசமாதிகள் உண்டு. சீவசமாதியிலிருப்பவர்கள் வேண்டிய போது வெளியே வரக்கூடியவர்கள். சிவசமாதியிலுள்ளவர்கள் அமைதியிலிருந்தவாறே அருள்புரியும் தன்மையுள்ளவர்கள். அவர்கள் ஆன்மதத்துவங்களைக் கடந்து ஆனந்தவாரியில் குளித்தவர்கள்.

சித்தர்கள் அகங்காரத்தை அடக்கி, ஐம்புலன்களை அடக்கி, அறிதுயில் கொள்பவர். சித் என்னும் ஞானம் கைவரப் பெற்றுச் சத்தைக் கண்டவர்கள். சிறந்தனவற்றைச் சிந்திப்பவர். தெய்வ வாழ்வைத் தெளிவாக உணர்ந்தவர்கள். மெய்யாகிய உடம்பு, பொய்யாகிப் போகாமல், உடம்பை வளர்த்து உயிர் வளர்த்து உடம்பிலிருக்கும் போதே உத்தமனாய இறைவனைக் கண்டவர்கள். உடம்பையே இறைவனுக்கு உறைவிடமாகவும் கொடுத்தவர்கள்.

சித்தர்கள் மெத்தவுணர்ந்த உத்தமர்கள். அவர்கள் அறிந்த மெய்ஞ்ஞானம் இன்றைய விஞ்ஞானங்களுக்கு மேலானது. சகல உலோகவகைகள், உப்புவகைகள், காடிவகைகள், காரவகைகள் எல்லாம் அறிந்தவர்கள். இரும்பைப் பொன்னாக்கியவர்கள். உலோகமொன்றின் அணுவடர்த்தியை மாற்றியமைத்து இன்னொரு உலோகமாக்கியவர்கள். மூலிகைகளின் மர்மத்தை அறிந்து இலேகியங்கள், செந்தூரங்கள் செய்து உண்டு நீண்டகாலம் வாழப் பழகியவர்கள். காற்று, வெயில், பனி முதலியன தம்மை எதுவுஞ் செய்யாமல் மரத்தடியிற் படுத்துறங்கியவர்கள். மிருகங்கள், பறவைகளோடு உறவாடியவர்கள். சந்திரனைக் கைப்பற்றிப் பந்தடிப்போம் என்றவர்கள். இயமனுக்கு எங்களிடத்தில் என்ன வேலை என்று பாடியவர்கள். தொலையில் உள்ளவருக்குச் செய்தியை உணரவைத்தவர்கள். முக்காலமும் உணர்ந்தவர்கள். இடம் விட்டு இடம் பெயர்வதில் ஒருவகை வேகம் கண்டவர்கள். அவர்களின் தண்டு, கமண்டலம், பாதக்குறடு, கமனக்குளிகை அற்புத சக்தி வாய்ந்தவை. இன்று கொம்பியூட்டர் முதலிய கருவிகள் எமக்குச் சாதகமாயுள்ள விஞ்ஞான நுட்பத்தின் மேலான மெய்ஞ்ஞான நுட்பம் அவர்களின் சாதனங்கள். அவர்கள் தங்களைக் கட்டுப்படுத்தியவர்கள். இச்சையை அகற்றியவர்கள். இந்திரியத்தை முறுகச் செய்து குண்டலியை மேலே ஊர்ந்து தாவச் செய்தவர்கள். வாசியை அடக்கி வசமாக்கியவர்கள். அவர்கள் சுவாசத்தை நிறுத்தி உயிர்ப்பை ஒழுங்காக்கியவர்கள். அவர்களுக்கு இரத்த சுத்திக்குச் சுவாசவேலை தேவையில்லை.

பழைய இந்துப் பண்பாட்டை வளர்த்த சித்தர்கள் வரிசை பெரிது. ஆயிரக்கணக்கான சித்தர்கள் குகைகளில் இருக்கிறார்கள். பலர் பூமிக்குள் அடக்கத்தில் இருக்கிறார்கள். அவர்களைக் கண்டு கொள்ளுதல் அரிதினும் அரிது.

ஆயினும் சித்தர்களுள் அனாதிநாதர், ஆதிநாதர், கடேந்திரநாதர், கோரக்கநாதர், சதோகநாதர், சத்தியநாதர், மச்சேந்திரநாதர், மதங்கநாதர் வகுளிநாதர் என்பவர்கள் நவநாத சித்தர்கள். இவர்கள் சிவபெருமானை நாதன் என அழைத்துத் தாம்பெண்கள் மனப்பான்மையில் நாயகன் நாயகி பாவனையில் வாழ்ந்தவராகலாம் எனக்கருத இடமுண்டு. [அவர்களைப்பற்றி ஆராய்வது எமக்கு அடாது ]

## இலிங்கேஸ்வரர் ஊரும் பேரும்

| | | | |
|---|---|---|---|
| 1. | சௌராட்டிரம் | — | சோமநாதர் |
| 2. | ஸ்ரீசைலம் | — | மல்லிகார்ச்சுனர் |
| 3. | உஜ்ஜயினி | — | மாகாளர் |
| 4. | ஓங்காரம் | — | பரமேஸ்வரர் |
| 5. | இமாசலம் | — | கேதாரர் |
| 6. | டாகினி | — | பீமசங்கரர் |
| 7. | காசி | — | விஸ்வேசர் |
| 8. | சிதாபுரம் | — | வைத்தியநாதர் |
| 9. | தாருகாபுரம் | — | நாகேசுவரர் |
| 10. | சேது | — | இராமேஸ்வரர் |

## பஞ்சபூத மரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசமரம் | — | ஆகாயம் |
| 2. | வாதராயணமரம் | — | வாயு |
| 3. | வன்னிமரம் | — | தேயு |
| 4. | நெல்லிமரம் | — | அப்பு |
| 5. | ஆலமரம் | — | பிருதிவி |

**இறை வழிபாட்டுக்காகவேதான் இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது.**

# இலங்கையில் இந்துநாகரிகத்தில் கண்ணகி வழிபாடு



கண்ணகி சோழநாட்டில் பிறந்து, பாண்டிநாட்டில் கணவனை இழந்து, சேரநாட்டில் சுவர்க்கம் சென்றவள். மூன்று நாடுகளுக்கும் தொடர்பான அவள் தெய்வ வடிவு பெற்றதும் ஈழநாட்டுக்கும் சொந்தமாயினள். கண்ணகி வாழிபாட்டை இலங்கைக்குக் கொண்டுவந்தவன் சமகாலத்தவனான கயவாகு வேந்தனவன். முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்தில் அவனுக்கும் சிறப்பிடம் கிடைத்துள்ளது.

கயவாகு வேந்தன் கொண்டுவந்த காரணத்தாற் போலும் கண்ணகி வழிபாடு பத்தினித்தெய்வ வழிபாடாக சிங்கள மக்களிடையே பெருமளவில் பரவுவதாயிற்று. அன்றித் தமிழ்ப் பெண்ணான அவள் வழிபாடு தமிழ்மக்களிடையேயும் பரவிப் பலஊர்களிலும் கண்ணகி கோயில்கள் எழுந்தன.

கண்ணகி வழிபாட்டில் தீவிர ஈடுபாடுகொண்டவர்கள் கிழக்கிலங்கையராவர். அவர்கள் மத்தியில் கண்ணம்மா என்னும் பெயர் பலவீடுகளில் வழங்குவதாயிற்று. மட்டக்களப்பில் சேரநாட்டினரின் தொடர்பு நெருக்கமானதாயிற்று. மட்டக்களப்பார் சேரநாட்டினரின் போக்கில் உடையணிந்தும் ஆபரணங்கள் பூண்டும் குடுமிவைத்தும் வாழ்ந்தனர். வெள்ளிக்காறை பூண்டு கன்னக்குடுமி வைக்கும் வழக்கம் மட்டக்களப்பில் நிலவியது. மலையாள உணவும், மலையாள மந்திரமுறைகளும் அங்கே வழங்கிவந்தன.

மட்டக்களப்பில் ஊர்கள் தோறும் கண்ணகி கோயில்களில் விழாக்கள், பூசைகள் நடைபெறுகின்றன. பூசை முறைகளை வேள்வி என வழங்கி மடைபடைத்தலும் நிகழ்ந்தன. ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் கண்ணகி கோயில்களிற் பெருவிழா. முன்னர் கோவை மாவட்டத்துத் திருச்செங்கோட்டில் கானக்குறவர் பொலம்பூவேங்கை மரநிழலில் கண்ணகியை வழிபட்ட முறையில் மட்டக்களப்பிலும் விழாக்கள் நடைபெற்றன.

பறை அடித்து, குழல் ஊதி, மணி இயக்கி, குறிஞ்சி பாடி, பூப்பலியிட்டு, தீபங்காட்டி, மழைபெய்து வளஞ்சுரக்கச் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தனர், வணங்கினர். கண்ணகி அம்மன் பூசை என அப்பெருவிழா சிறப்புற்றது. பூரணைநாளில் முழுநிலாப் பொழுதில் விழா பல்லாயிரவரைக் கவர்ந்தது.

மட்டக்களப்பு மாநிலத்தில் கச்சான்காற்று வெப்பமுள்ளதாக வீசும்போது மக்களிடையே வெப்புநோய்கள் மிகுவது வழக்கமாயிருந்தது. இந்த நோய்கள் நீங்குதல்வேண்டும் என வேண்டிய மக்கள் கண்ணகி வழிபாடு செய்ததும் உண்டு. இன்னும் முன்னர் இந்திர விழாவின்போது வரட்சி நீங்க மழைபெய்து விளைவு மலிந்து பசியும் பிணியும் நீங்குதல் வேண்டுமென வேண்டினர்போல, இவர்களும் தங்கள் நாட்டில் மும்மாரி பெய்து மலிவளஞ் சுரக்கக் கண்ணகியம்மன் பேரருள் சுரத்தல்வேண்டும் என்று வாழ்த்தி வணங்கினர், பசியும் பிணியும் நீங்கி, பகையும் சாவும் குறைந்து, வசியும் வளனும் பெருகுதல்வேண்டும் என்பது மக்களின் பெருவிண்ணப்பம்.

இங்ஙனமாகக் கண்ணகியம்மனுக்குக் கோயில்கள் தோறும் பூசையும் விழாவும் எடுத்த மக்கள், வீதிகள் வீடுகள் விளங்கத் தங்கள் இல்லங்கள் தோறும் மங்கல விளக்கேற்றிப் பாலும் சர்க்கரையும் சேர்த்த அமுது படைத்து வணங்கினர்.

பத்தினித்தெய்வம் தங்களுக்குப் பேரருள் சுரப்பதாலேயே தங்கள் பிரதேசம் ஈழத்துத் தானியக்களஞ்சியமாக வயல்கள்தோறும் பொலி பொலி என நெல்லும் கரும்பும் விளைய, வீடுகள்தோறும் மாடுகள் குடம் நிறையப் பால்பொழிய, காடுகள் தோறும் கருந்தேன் ஒழுக, தாம் பலவகையாலும் பண்பாடு தழைக்க வாழ்வதாக மக்கள் கருதினர்.

இன்னும் தங்கள் வைகாசி விழாவிலே கல்யாணச் சடங்கு, பச்சைவெட்டு, குரவை முதலியன செய்வதும், கண்ணகிபேரில் தம் நாட்டவர் பாடிய வழக்குரை காவியம், தாலாட்டுப்பாடல் முதலியன படித்துக் குரவை முதலிய ஆட்டங்கள் ஆடுதலும் வழக்கமாகும். பழைய சோழப் பெருவேந்தர்கள் நடத்திய இந்திர விழாவுக்கு இணையாக ஈழத்து மட்டக்களப்பு மாநிலத்தார் கண்ணகி விழாவைக் களிப்போடு செய்தனர்.

கண்ணகி வழிபாடு திருச்செங்கோடு என்னும் தலத்தில் ஊற்றெடுத்துக் கடல்சூழிலங்கைக்கும் பாய்ந்ததாகும். அவணுழையிருந்த கயவாகு வேந்தனுக்கும் தந்தேன் வரம் என்று அன்றே கண்ணகி வரங்கொடுத்தாள் என்பது சிலப்பதிகாரத்தின் கூற்று.

அங்கே மாடலன் என்னும் மறையவன் வழிகாட்டச் செங்குட்டுவன் என்னும் சேரவேந்தன், ஆகம முறைக்கமையக் கண்ணகிக்குக் கோட்டம் அமைத்தமை வரலாறு.

கோயில் வழிபாட்டின்போது கண்ணகியின் சமகாலத்தவரும் நெருங்கிப்பழகியவருமான தேவந்தி, மாதரி மகள் ஐயை முதலானோரும் உடனிருந்தனர். கண்ணகி தெய்வ உருவில் செங்குட்டுவனுக்குக்காட்சி கொடுத்தபோது, அவன் இறும்பூதெய்திக் கூறியதாகவுள்ள அடிகள் உருக்கமானவை.

(12 ஆம் பக்கம் பார்க்க

★ இறைவன் ஒருவனே பலமூர்த்தங்களாகி எழுந்தருளுவர் ★

உ

# இந்துநாகரிகத்தில் வழங்கும் வடமொழிப் பதங்கள்

1. அகக்கரணம் ... உட்கருவி
2. அகங்காரம் ... செருக்கு
3. அகண்டபூரணம் ... எங்கும் நிறைவு
4. அகண்டன் ... முழுமுதல்
5. அகமர்ஷணம் ... நீருக்குள் வணக்கம்
6. அகம் ... நான்
7. அகப்பிரமம் .. நானே கடவுளெனல்
8. அகர்முகம் ... விடியற்காலை
9. அகிம்சை ... கொல்லாமை
10. அகிலகாரணன் ... முழுமுதல்வன்
11. அகிலம் ... உலகு
12. அகோசரம் ... அறியொணுதது
13. அகோராத்திரம் ... பகலிரவு
14. அட்சதை ... மங்கல அரிசி
15. அட்சரம் ... எழுத்து
16. அக்காரம் ... வெல்லம்
17. அஞ்ஞானம் ... அறியாமை
18. அக்கிரகாரம் ... பார்ப்பனர் சேரி
19. அக்கிரபூசை ... முதல்வழிபாடு
20. அக்கினி ... தீ (நெருப்பு)
21. அக்கினிகாரியம் ... எரியோம்புதல்
22. அக்கினிகோத்திரம்... தீவேள்வி
23. அக்கினிசுவாலை ... தீப்பிழம்பு
24. அக்கினிதாரனம் ... தீவளர்த்தல்
25. அக்கினிபிரவேசம் ... தீப்பாய்தல்
26. அங்கபிரதட்சணம் உடல் வலம்உருளல்
27. அங்கம் ... உறுப்பு
28. அங்காரகன் ... நெருப்பு - செவ்வாய்
29. அங்கி ... தீக்கடவுள்
30. அங்குசபாசன் ... பிள்ளையார்
31. அங்குட்டம் ... பெருவிரல்
32. அசத்தியம் ... பொய்
33. அசரம் ... அசையாதது
34. அசரீரி ... வான் ஒலி
35. அசற்காரியம் ... உள்ளதல்லாதது
36. அசித்து ... அறிவில் பொருள்
37. அசுத்தமாயை ... துவாமாயை
38. அசுபக்கிரியை ... பிணச்சடங்கு
39. அசுரகுரு ... வெள்ளி
40. அசரர் ... இருள்மிக்கவர்
41. அசுரமேதம் ... குதிரைவேள்வி
42. அசூசி ... அழுக்கு
43. அசேதனம் ... அறிவில்லாதது
44. அச்சுதன் ... திருமால்
45. அஞ்சலி ... வணக்கம்
46. அஞ்சனம் ... மை
47. அச்சுதன் ... அழிவில்லாதவன்
48. அட்சமாலை ... உருத்திராக்கமாலை
49. அட்சரசுத்தி ... எழுத்துத்திருத்தம்

**பண்டைய பாரதப்.........**

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெகுவாக வியந்தனர். பிரான்ஸ் நாட்டுப் பேராசிரியர் பிலியோகா பாரதத்திலும்; அகன்ற பாரதம், தீவாந்தரபாரதம் எனவழங்கிய தெற்கு, தென்கிழக்கு நாடுகளிலும் கண்டெடுக்கப்பெற்ற புதை பொருள்களின் பொருத்தமான அமைப்பைப் புகழ்ந்து போற்றினர். பாண்டிச்சேரியிலிருந்து பிரெஞ்சுக்காரர் செய்து கண்ட ஆராய்வுக் கண்டுபிடிப்புக்களை வியந்தார்.

மத்திய கிழக்கு நாடுகளின் கண்டுபிடிப்புக்களை மட்டிட்ட பேராசிரியர் மலோவன் மட்டில்லா மகிழ்ச்சி பூப்பப் பேசினர். மத்திய கிழக்கு நாடுகளிலெல்லாம் பாரத நாட்டுப் பண்டங்கள் மண்மூடிக்கிடந்த வரலாற்றை எடுத்துக் கூறினர்.

கம்பே குடாவில் லோதால் என்னும் பகுதியில் ருஓ என்பார் கண்டுபிடித்தவற்றை மேற்காசிய தொடர்பு கொண்டு விளக்கினர். ஈரான் நாட்டுச் சுசா நகரத்தையும், மெசொப்பொட்டேமியா ஊர் என்ற நகரத்தையும் விளக்கினர்.

மொஹஞ்சதரோ, ஹரப்பா நாகரிகத்தை சேர்ந்த முத்திரையிடுதல் அதன் அடையாளங்களின் பழைமையை விளக்கினர். ரெறகோட்டா என்னும் உரோமானிய விளக்கின் அமைப்பு விசேடத்தையும் விளக்கினர். ஆனைத்தந்தம், சங்கு, வைரக்கல் முதலியன வெல்லாம் லோதால் துறையிலிருந்து சுமேரியா போன வரலாற்றைக் கூறினர்.

பேராசிரியர் பிபி என்பார் மொஹஞ்சதரோவின் பண்டங்கள் குவைற் நாட்டுக்கு ஏற்றுமதியான சுவையான செய்தியைக் கூறினர். இன்னும் இத்தகைய ஏற்றுமதி யூபிரட்டீஸ், தைகிறிஸ் நதிக்கரை நாகரிக நகரங்களுக்கும் சென்றடைந்தன என்று தெளிவாகக் கூறினர்.

பேராசிரியர் ரோல்ஸ்ரோய் முதலானோர் அரிக்கமேட்டிலிருந்து உரோமபுரி வர்த்தகம் விருத்தியடைந்த விந்தையை விரித்துக் கூறினர்.

**இலங்கையில்........**

11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"என்னேயிஃ தென்னேஃ தென்னேஃ தென்னேகொல்
பொன்னம் சிலம்பிற் புனமே கலைவளைக்கை
நல்வயிரப் பொற்றோட்டு நாவலம் பொன்னிழைசேர்
மின்னுக்கொடியொன்று மீவிசும்பில் தோன்றுமால்"

கயவாகு வேந்தன் திருச்செங்கோட்டிலிருந்தே கண்ணகியின் சிலாவிக்கிரகத்தையும் பூசைமுறைகள்கூறும் பத்ததி ஏட்டுப்பிரதியையும் கொண்டுவந்தான். அவனுடைய காதில் கவுந்தியடிகள் பாடிய வரிகள் ஒலித்த வண்ணமாகவே இருந்தன.

"கற்புக் கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்
வானம் பொய்யாது, வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு".

★ **வேதமந்திரங்களும் ஆகமகிரியையும் உடையது சைவம்** ★

உ

# இந்துப் பண்பாடு

இந்திய நாகரிகத்தில் அதன் பண்பாடு பழைமையானது, பாரம்பரியமானது. நம் முன்னோர் அளித்துச்சென்ற பெரிய பண்பாட்டை, மிகப்பெரிய பண்பாடாக எம் பிற்காலத்தவருக்கு நாம் விட்டுச் செல்லுதல் வேண்டும் என்பது மகான் அரவிந்தரின் அருள்வாக்கு.

பண்டைய இந்திய பண்பாட்டின் போக்கு உண்மைக்கு மதிப்புக்கொடுத்தல், தியாக உணர்ச்சிபெறுதல், சமாதான வாழ்வுக்கு வழிவகுத்தல் முதலியன வாகும். ஆன்மிக முன்னேற்றமே பெருந்தவம் எனக் கருதப்பெற்றது. ஆன்மிக முன்னேற்றத்தால் வீடுபேறு என்னும் முத்தியடைதலே வாழ்வின் நோக்கமாய் இருந்தது.

முற்காலத்தில் செல்வத்தாலோ பண்டங்களின் குவியலாலோ ஒருவர் பெருமை பெறவில்லை. பெரியவர் என்றால், ஒழுக்கத்தால் உயர்ந்து ஆன்மிக முன்னேற்றமடைந்தவரையே குறித்தனர். யக்ஞவல்கியர் என்னும் இல்லற ஞானியார் தாம் தனிமையாகக் கடுந்தவஞ் செய்யப்போவதற்கு முன், தம்முடைய பொருள் பண்டங்களை எல்லாம் மைத்திரேயி, காத்தியாயினி என்னும் இரு மனைவியரிடையே பங்கு பிரிக்க முயன்றார். அவ்வேளை மைத்திரேயி தமக்குப் பொருள் பண்டங்கள், பொன் எதுவும் வேண்டாம் என்றார். "பொருள் பண்டங்களால் நான் அமரத்துவம் அடைய முடியாது" என்றார்.

இதைக் கேட்டு யக்ஞவல்கியர் மகிழ்ந்தார். அவர் உன்னதமான மறைபொருளை மோனமாக வைத்திருத்தல் வேண்டும் என்னும் கோட்பாடுடையவர். அவர் மைத்திரேயியைப் பார்த்துக் கூறிய உபதேச மொழிகள் பிருஹத்தாரண்ய உபநிடதத்தில் அமைந்துள்ளன. இவை ஜனகமகாராசாவோடு உரையாடிய போது உரைத்தனவுமாம்.

"எவன் பற்றுக்களினின்றும் விடுபட்டவனோ, பரம்பொருட்பற்றே அவனது பற்றுயிருப்பதால், அப்பற்று நிறைவேற்றப்பெற்றவன் எவனோ, அவனை உயிராற்றல்கள் நீங்குவதில்லை. அவன் பரம்பொருளோடு கலந்து ஒன்றிவிடுகிறான்."

எப்போது இதயத்தைப் பற்றியிருக்கும் ஆசைகள் அனைத்தும் நீங்குகின்றனவோ அப்போது, மரணக் கொடுமையுள் உழலும் மனிதன், மரணமிலாப் பெருவாழ்வு எய்துகிறான். இப்பிறவியிலேயே கூட விடுதலை எய்துகிறான்.

இஃது இவ்வாறாக வாழ்வில் தோல்வியோ, பொருள்பண்ட இழப்போ ஆத்மஞானம் படைத்தவனைப் பாதிப்பதில்லை. இதனைப் பாரதநாட்டைப் படைகொண்டு வெருட்டிப் பணியச்செய்த பல வெளிநாட்டினர் தங்கள் போக்குகளை இங்கே நிலையாக விட்டுச்செல்ல முடியாது போனமைகொண்டு அறியலாம். மனிதனின் ஆன்மிக ஆற்றலை இரும்புக் கோட்டைகள் அல்ல, காற்றோட்டமில்லாது புழுங்க வைக்கும் கடுஞ்சிறையல்ல எதுவுமே ஒன்றுஞ்செய்ய முடியாது. ஆன்ம ஆற்றல் என்றும் எவர்க்கும் அடிபணியவில்லை. இந்துப்பண்பாட்டில் தவத்தின் மகிமையை மைத்திரிமா முனிவர் பிரம்மஞானம் என்னும் தமது உபநிடதத்தில் நியாயகாட்சியாலும், தவத்தாலும், தியானத்தாலும் பிரம்மனை எய்தலாம் என்கிறார்.

இனி தைத்திரீய உபநிடதம் என்னுதலிற்றோ எனில் மிகப்பெரிய தவத்தைப்பற்றிக் கூறியுள்ளது. இன்னும் இறைவன் கடுந்தவஞ்செய்தபின்பே இந்த உலகைப் படைத்தார் என்கிறது. சத்தியவாசர் உண்மை நிறைந்தவர் அவர் என்ன சொன்னார்?

"நான் உண்மையையே பேசுவேன். தெய்விக சட்டத்தின் சொற்களே என் இதழ்களில் மலரும். உன்னத உண்மையின் ஒளி நம்மை மிளிர்விப்பதாகுக. ஞான மகிமையை நாம் எய்துவோமாக. இறைவா, அடியேன் தேவரீரிடத்தில் வருவேனாகுக. தேவரீரும் அடியேனிடத்தில் எழுந்தருள்வீராகுக. ஓ! தலைவரே!! உமது கங்கையில் நான் எனது பாவங்களைக் கழுவுவேனாகுக.

இனி எமக்குத் தேவையானவற்றைத் தேவரீர் அறிவீர்.

அறமும் புனிதநூற் கல்வியும் போதனையும்
உண்மையும் புனிதநூற் கல்வியும் போதனையும்
தவமும் புனிதநூற் கல்வியும் போதனையும்
தன்னடக்கமும் புனிதநூற் கல்வியும் போதனையும்
அமைதியும் புனிதநூற் கல்வியும் போதனையும்
வேள்வியும் புனிதநூற் கல்வியும் போதனையும்
மானுடமும் புனிதநூற் கல்வியும் போதனையும்

பண்டைய பண்பாட்டில் வெற்றி என்பது வெளிச் சாதனங்கள் அல்ல. அது உள்ளே உள்ள தவவலிமையேயாம். இதனைச் சங்ககாலப் புலவர்கள் வேந்தர்களுக்கு விளக்கமாகக் கூறியுள்ளனர். அதில் ஒன்று மதுரை மருதன் இளநாகனார் நன்மாறனைப் பாடியதாகும்.

மூவேந்தருள்ளும் மேம்பட்ட பாண்டியனே, கடிய சினத்தையுடைய கொல்யானையும், விரைந்த செலவையுடைய மனஞ்செருக்கிய குதிரையும், நெடிய கொடியையுடைய உயர்ந்த தேரும், நெஞ்சுவலியையுடைய போரை விரும்பும் மறவரும் என நான்கு படையும் கூட மாட்சிமைப்பட்டதாயினும், மாட்சிமைப்பட்ட அறநெறியே வெற்றியைத் தருவதாகும்,

"வேந்து மேம்பட்ட பூந்தார் மாற,
கடுஞ்சினத்துக் கொல்களிறும்
கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும்
நெஞ்சுடைய புகன்மறவரும் என
நான்குடன் மாண்ட தாயினு மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்"

(14ஆம் பக்கம் பார்க்க)

உ

## சேக்கிழார்



பிற்காலச் சோழர்களுள் குலோத்துங்கப் பெயர் பெற்ற மூவர்களுள் நடுவணுக நிலவி, நாடாண்ட இரண்டாம் குலோத்துங்க சோழப் பேரரசனின் பேரவையில் முதல் மந்திரியாயிருந்தவர் சேக்கிழார்.

சேக்கிழார் சைவத் திருநெறியின் தனிப்பெருங் காவலராக விளங்கியதைக் குலோத்துங்க சோழன் கண்டு தலை வணங்கினுன். குலோத்துங்க சோழன் சேக்கிழார் மீதுகொண்ட பெருமதிப்பு வரலாற்றுச் சிறப்புடையதாய்ப் பெரும்புகழ் பெற்று நிலவுகிறது.

சேக்கிழார் அரசசேவையில் ஈடுபடத் தொடங்கிய வேளையில் அரசன் அவருடைய அறிவின் திறத்தை அறிந்து உத்தமசோழப் பல்லவன் என்னும் பட்டத்தை நல்கிக் கௌரவித்ததோடு, அவர் திருவருள் நிரம்பப் பெற்று அரசசேவையிலிருந்து ஓய்வுபெற்றபோது, அவர்தம் பக்தி நிலையைக் குறித்து தொண்டர்சீர் பரவுவார் என மற்றொரு பட்டம் நல்கி மாட்சிமைப்படுத்தினுன்.

தொண்டைநாட்டைச் சேர்ந்த பிரதேசங்களிற் குடியேறிய சைவத்தமிழர்; கூடலூர், புரிசை, குளப்பாக்கம் முதலிய பகுதிகளில் வாழ்ந்த காலத்தில் கூடல்கிழார் புரிசைகிழார், குளப்பாக்கிழார் முதலான குடிப்பெயர்களால் வழங்குவாராயினர்.

இங்ஙனம் உரியவர் உரிமையாளர், சொந்தக்காரர் என்னும் பொருள்தரும் கிழார் வரிசையில் வேளாண்மை என்னும் உழவுத் தொழிலுக்கு உரிமையாளராய் வாழ்ந்தவர்கள் சேக்கிழார் எனப்பெயர் பெற்று விளங்கினர். அவர்கள் புலியூர்க்கோட்டத்தில் குன்றத்தூர் என்னுமிடத்தில் வாழ்ந்தனர்.

இத்தகை வேளாண் குடியில் சேக்கிழான் இராமதேவன், சேக்கிழான் பாலறுவாயன் எனப் பெயர் பெற்ற சகோதரர் இருவர் வாழ்ந்தனர். இராமதேவன் எனப் பெயர்பெற்ற அண்ணனுக்கு அருள்மொழித்தேவர் எனவும் பெயர் வழங்கியது. அருள்மொழி என்பது சோழமன்னர்களுள் வழங்கிய மதிப்புள்ள பெயராகும். பாலறுவாயர் என்பது திருஞானசம்பந்தமூர்த்திநாயனுரின் திருநாமமாகும்.

---

## இந்துப்பண்பாடு

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்துப் பண்பாட்டில் இன்னெரு உயர்ந்த பண்பு உண்மை. அது உள்ளத்தால் உண்மை, உரையால் வாய்மை, செயலால் மெய்ம்மை எனச் சிறப்புற்றது, உபநிடதத்தில் உண்மை ஒன்றுதான் வெல்லும் என்னும் மகாவாக்கியம். இன்று பட்டொளி வீசிப் பறக்கும் பாரதநாட்டுக் கொடியில் இலட்சியமாகவுள்ளது. அன்றி மனிதன் உண்மையின் நம்பிக்கையினுல் உருவாக்கப்பெற்றுள்ளான். மனமும், உயிரும், ஒளியும், உண்மையும் அளப்பரிய அண்டவெளிகளுமான உறு பொருள் ஒன்றுண்டு.

தந்தையின் பெயர் தெரியாமல் ஜாபாலா என்பவளின் மகனை இளைஞன் தன்னை சத்தியகாமன் ஜாபாலா என்றே குருவிடம் விண்ணப்பித்தான். "உண்மையினின்றும் விலகாதவன் நீயே! அருகில் வருவாயாக" என்று கௌதமர் அணைத்துப் படிப்பித்தார்.

சுவேதகேது ஆருனேயன் படிக்கப்போனபோது தந்தையார் சொன்னுர் "உன்னத உண்மையெய்தும் மாணுக்கனுகுக" என்று ஆசிர்வதித்தார். அவன் பன்னிரண்டு ஆண்டுகள் கற்றுப் பெருமிதத்துடன் மீண்டபோது, ஒரு ஆலம் விதையைப் பிய்த்து, அதனுள் ஒன்றையும் காணேம் என்று கூறிய மகனுக்கு தம்பி, அதற்குள் ஓர் உண்மையிருக்கிறது. அதுவே மரமாக முளைக்கிறது. அது உண்மை என்றெல்லாம் விளக்கினர். காணமுடியாத நுண்மைப் பொருள் உண்மை என்பதைப் பல பரிசோதனைகள் மூலம் தந்தை விளக்கினர். உண்மை பேசும் மனிதன் பெருமை மிக்க மனிதனுவன்.

உண்மை அழியாதது. அழகியது. நல்லது. சத்தியம், சிவம், சுந்தரம் என்றெல்லாம் வழங்குவது. நான் என்றும் உண்மை பேசுவேன் என்பது பண்பாட்டு இலட்சியம்.

பண்பாட்டு வாழ்வில் அஹிம்சையும் அமைதியும் சிறப்பாக மதிக்கப்பெற்றன. எங்கும் சாந்தி நிலவுமாறு யசுர்வேத சுலோகங்கள் சாந்தி சாந்தி என்று ஒலித்தன.

இராதாகிருஷ்ணன் அவர்கள் சுதந்திரமும் பண்பாடும் என்னும் நூலில் இந்தியரும் கிரேக்கரும் எவ்வளவு தூரம் பண்பாட்டில் உயர்ந்து வாழ்ந்தனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

---

**மனிதன் மனிதனுய் வாழப் பழகுவது சமய அறிவு ★**

# இந்துமதத்தில் பயின்றுவரும் தொகையகராதி

## ஒன்று

1. ஏகம்சத் 2. ஒன்றவன்தானே
3. தெய்வம் ஒன்றே 4. ஒன்றென்றதுஒன்றே
5. உலகுக்கு ஒருவனுய் 6. தொல்லைமுதல்தான் ஒன்று
7. அருவுருவம் சதாசிவம்

## இரண்டு

1. அறம்
இல்லறம் - துறவறம்

2. இருமை
இம்மை - மறுமை

3. தோற்றம்
சரம் - அசரம்

4. வினை
நல்வினை - தீவினை

5. உலகம்
சித்து - அசித்து

6. சுடர்
சூரியன் - சந்திரன்

6. உவா
அமாவாசை - பூரணை

7. சுருதி
மந்திரம் - பிரமாணம்

8. சிவசின்னம்
திருநீறு - உருத்திராக்கம்

9. வாயுவில் நிகழ்வன
சப்தம் - ஸ்பரிசம்

10. மீமாம்சை
பூர்வம் - உத்தரம்

11. வைஷ்ணவ ஆகமம்
பஞ்சராத்திரம் - வைகாசனம்

12. நியாயம்
கௌதம சூத்திரம் - கணாத சூத்திரம்

13. அகக்கண்
மனக்கண் - ஞானக்கண்

14. அகக்கூத்து
சாந்திக்கூத்து - விநோதக்கூத்து

15. அகக்கூத்துக்கை
எழிற்கை - தொழிற்கை

16. அகில்
அகில் - செவ்வகில்

17. அசுவினி தேவா
தத்திரன் - நாதத்தியன்

18. அஞ்ஞான சக்தி
ஆவரணசக்தி விட்சேபசக்தி

19. அஞ்ஞானம்
காரியாஞ்ஞானம் - காரணுஞ்ஞானம்

20. அத்தியாசம்
ஞானுத்தியாசம் - அர்த்தாத்தியாசம்

21. அந்தணர் மார்க்கம்
வைதிக மார்க்கம் - தாந்திரிக மார்க்கம்

22. அபரோட்ச ஞானம்
திடம் - அதிடம்

23. அபானவாயு
மலம் விடல் - சலம் விடல்

24. அமிர்தம்
தேவாமிர்தம் - பஞ்சாமிர்தம்

25. அரக்கு
அரக்கு - கொம்பரக்கு

26. அர்க்கியம்
சாதாரணம் - விசேடம்

27. அருபம்
கடவுள் - ஆன்மா

28. அருள்
அறக்கருணை - மறக்கருணை

29. அவத்தை
கேவலாவத்தை - சகளாவத்தை

30- அழிவில்லாதவை
இறைவன் - ஆன்மா

---

**சிவபெருமானின் திவ்விய சக்திகள்**

பார்வதி, துர்க்கை, காடுகிழான், விஷ்ணு. இன்னும் கந்தபுராணத்தில் ஆதலில் நமது சக்தி அறுமுகன் எனவரும் பாடலும் நினைவுக்குரியதாகும்.

---

★ வேதங்கள் மிகப் பழைமை வாய்ந்த சைவப் பொதுநூல்கள் ★

# சிவாகமங்களின் வழியில்வந்த பத்ததிகள்

1. பத்ததி என்பது யாது?
சிவாகமங்களின் கிரியாகாண்டப் பொருளைத் திரட்டிக் கூறுவது.

2. பத்ததி என்பதன் பொருள் என்ன?
வழி.

3. பத்ததிகள் செய்தவர்கள் யாவர்?
சிவாசாரியர்கள்.

4. சிவாசாரியர்கள் எனப்பெற்றோர் எவரெவர்?
சோமசம்பு, அகோரசிவம், பிரம்மசிவம், போஜ தேவர் முதலாகப் பதினெண்மர்.

5. பத்ததிகள் எல்லாமாக எத்தனை?
பதினெட்டு.

6. பத்ததிகளிற் கூறப்பெற்ற விடயங்கள் யாவை?
பூர்வகிரியை, அபரகிரியை என்பனவும் சம்ஸ்காரங்கள் என்னும் நற்செயல்கள் அநுட்டானங்களுமாம்.

7. சோமசம்பு சிவாசாரியர் செய்த நூலின் பெயர் என்ன?
கிரியா காண்டகிரமா வளி

8. சோமசம்பு பத்ததியின் விதிகள் யாவை?
நித்தியம், நைமித்தியம், காமியம்.

9. சோமசம்பு சிவாசாரியார் யாவர்?
கோளக மடாதிபதி.

10. அகோரசிவம் செய்த பத்ததியின் பெயர் என்ன?
கிரியா கிரமத் யோதிகை.

11. ஹம்சயோகியர் என்பவர் யாவர்?
நிர்வாண தீட்சையுடையவர்களும், ஞானிகளுமாவர்.

12. கிருஸ்ணு ஜினம் என்பது என்ன?
கரும்புள்ளிகள் உள்ள மான்தோல்.

13. அந்தரியாகம் என்பது என்ன?
மனதால் சேகரிக்கப்பெற்ற மலர்களால் பரமசிவனை இருதயத்தில் பூசித்தல்.

14. அக்கினி பூசைக்குரிய எட்டு அங்கங்கள் எவை?
நீர், பால், தர்ப்பை நுனி, அரிசி, மலர், எள், யவம், கடுகு.

15. அமிருதீகரணம் என்றால் என்ன?
விக்கிரகத்தையும் பரமசிவனையும் அபேதமாக எண்ணுதல்.

16. பூசையில் பத்து சம்ஸ்காரங்கள் யாவை?
ஆவாகனம், தாபனம், சாந்நித்தியம், சாந்நிரோதனம், சகரீகரணம், ஏகீகரணம், பாத்தியம், ஆசமனீயம், அர்க்கியம், புஷ்பம் சமர்ப்பித்தல் என்பனவாகும்.

17. உபசாரங்கள் என்பன எத்தகையவை?
பஞ்சபூதங்கள் சம்பந்தமானவை.

18. பிருதிவி சம்பந்தமானவை யாவை?
சந்தனம், புஷ்பம், கிழங்கு, வேர், பழம்.

19. சல சம்பந்தமானவை யாவை?
நீர், பால்ஆடை, தயிர், கோமூத்திரம்

20. அக்கினி சம்பந்தமானவை யாவை?
பொன், இரத்தினம், தீபம், ஆபரணம்.

21. வாயு சம்பந்தமானவை யாவை?
சாமம், தூபம், விசிறி.

22. ஆகாசம் சம்பந்தமானவை யாவை?
கீதம், வாத்தியம், மணிசப்தம்.

23. பூசையில் பூவின் தனிச்சிறப்பு என்ன?
ஈஸ்வரன் சிரசில் எந்தநேரமும் ஏதாவது உரிய ஒரு பூ இருத்தல் அவசியம்.

24. சாத்துவிக ஜபம் என்பது யாது?
மனதால் செய்யப்பெறுவது,

25. தாமசஜபம் என்பது யாது?
பிறருக்குக் கேட்கும்படி ஜபம் செய்தல்.

26. சிவோகம் பாவனையின் கருத்து என்ன?
எல்லாம் சிவமாய் இருத்தலில் அடியேனும் சிவமாய் இருக்கிறேன் என்பதாம்.

27. சமாதி என்பது யாது?
தியானம் செய்யப்படும் பொருள் மாத்திரம் தோன்ற நிட்டையில் இருத்தல்.

28. தபசு என்பது யாது?
பிராணுயாமம்.

29. தாரணை என்பது யாது?
சித்தத்தைக் கட்டுப்படுத்தல்.

30. பாவனை என்பது யாது?
மனத்தின் தொழில்.

31. ஜபம் என்பது யாது?
தியானம் செய்யப்படும் பொருள் தோன்றுவதற்காக அப்பொருளைச் சொல்லக்கூடிய மந்திரத்தை உச்சரித்தல்.

32. பசுவின் பெருமை என்ன?
தேனு உருவில் தோன்றியது. வசிட்டர் முதலியோரால் வணங்கப்பெற்றது. பாவங்களைப் போக்குவது. கோமாதா எனப் பூசிக்கப்பெறுவது. பூசைக்குப் பஞ்சகௌவியம் தருவது. திருநீறு தருவது. தாயைப்போல எம்மை வளர்ப்பது இலட்சுமி உறையப்பெறுவது.

33. சாந்தானிக பிட்சாபோசனம் என்பது யாது?
சீடர்களாற் கொடுக்கப்பெறுவனவற்றைக் கொண்டு ஆசிரியர்க்கான உணவு.

34. பதிதன் என்பவன் யாவன்?
தன்னுடைய ஆச்சிரமம் நிலை, தகுதி இவற்றிலிருந்து தவறியவன்.

35. பரிசுத்தமான பிச்சை என்பது எது?
உரியகாலத்தில் எடுக்கப்பெற்ற பிச்சை.

36. தீபனம் என்றால் என்ன?
சுத்தமாக்கப்பெற்றுப் பிரகாசிக்கச் செய்வது.

★ ஆகமங்கள் மிகப்பழைமை வாய்ந்த சைவச் சிறப்பு நூல்கள் ★

உ

# வேதாந்த தேசிகர்

கல்வி கரையில்லாக் காஞ்சிப்பதியிலே திருத்தண்கா என்னும் திவ்வியவூரிலே அனந்தசூரி என்றும், அனந்த சோமயாஜி என்றும் வழங்கிய பெரியாருக்கு தோதாத்திரஅம்மா என்னும் மனைவியார் வயிற்றில் 1600 ஆம் ஆண்டிலே இவர் தோன்றினர் என்ப.

இளமையில் வேங்கடநாதசர்மா எனப் பெயர் பெற்ற இவர், கிடாம்பியப்புள்ளார் என்பாரிடத்தில் நல்ல முறையிற் கல்வி கற்றுவந்தார். இவரின் குடும்பம் படித்த குடும்பமாதலின், இவருக்குப் படிப்பு நன்ருக வந்தது. இவர் ஐந்து வயதுப் பாலகனுயிருந்தபோதே கதாகாலச்சேபங் கேட்டு விளங்கிக் கொண்டவர் என்பர். இவரின் பாட்டனுர், தந்தையார், மாமனுர் முதலானோரின் படிப்பு வாசனை இவரை உருவாக்கி வந்தது.

மாமனுர் ஆத்திரேய இராமானுஜர் என்பார் கருடமந்திர உபாசகராயிருந்து, காட்சி பெற்று ஹயக்கிரீவமந்திர உபதேசமும் பெற்றவர். ஹயக்கிரீவமந்திரம் தெய்வதரிசனத்தைப் பற்றிக் கூறுவதாகும்.

இவ்வாறே இளைஞர் வேங்கடநாதசர்மாவும் கருடதரிசனம் உபதேசம் பெற்று, அயக்கிரீவ தோத்திரம், கருடபஞ்சாசத் முதலிய நூல்களைச் செய்து புகழ் பெற்ருர்.

இவர் வடமொழி, தென்மொழி என்னும் இரு மொழிகளிலும் புலமை பெற்று, வேறு பல நூல்களையும் செய்தார். கோபாலவிம்சதி, ரகுவீரகத்தியம், தேகளீகஸ்துதி, அஷ்டபுஜாஷ்டகம், வேகாசேதுஸ்தோத்திரம், சரணுகதி தீபிகை, காமாட்சி காஷ்டம், பிரமாஸ்துதி, ஸ்ரீஸ்துதி, வைராக்கிய பஞ்சகம், சங்கல்பசூரியோதயம், பாதுகாஸ்சகஸ்ரம் முதலிய நூல்களையும் செய்துள்ளார்.

தமிழில் இவர் செய்தனவாகவுள்ளவை அடைக்கலப்பத்து, அர்த்தபஞ்சகம், வைஷ்ணவதினசரி, பன்னிருதிருநாமம், திருச்சின்னமாலை, அத்திரிமான்மியம் முதலியனவும் இன்னும் பிறவுமாம்.

இவ்வாருக இவர் முப்பத்திரண்டு தோத்திரநூல்களையும், மூன்று காவியங்களையும், இருபத்தெட்டு அநுட்டான நூல்களையும், முப்பத்திரண்டு இரகசிய நூல்களையும், இருபத்திநான்கு சம்பிரதாயநூல்களையும், ஒருபகவத் நூலையும் செய்தார்.

இவர் தம்மைச் சந்தமிகு தமிழ் மறையோன் எனக் கூறிக்கொள்வது வழக்கம். இவர் இராமானுஜரின் விசிட்டாத்துவைத கொள்கையை நூல்களாலும் பிரசாரத்தினுலும் பரப்பியவராதலால், வேதாந்ததேசிகர் எனப் பெயர் பெற்ருர் என்பர்.

இவர் ஆழ்வார்களின் அருளிப்பாடுகள் வேதங்களுக்குச் சமமானவை எனக் கூறித்திரிந்தவர். அதனுல் ஆழ்வார்களின் பாடல்களுக்குப் புதுவாசனை உண்டாக்கியவர் எனப் புகழ் பெற்றவராவர்.

வேதாந்ததேசிகர் தலைசிறந்த அறிவாளியாயும், சிந்தனையாளராயும், புலவராயும், நாடகாசிரியராயும், தத்துவஞானியாயும் விளங்கியவர் என்பர். இவர் இராமானுஜருக்கு அடுத்தாற் போல விசிட்டாத்துவ மேதையெனக் கருதப்பெற்றவர்.

இவர் தமது காலத்தில் நிலவிய வடகலை, தென்கலை மார்க்கப்பிரிவுகளில் வடகலையையே மேற்கொண்டவராவர். வடகலையார் பழைமை தழுவிய கோட்பாட்டினராவர். அவர்களுள் வைணவம் வளர்த்த மிகப் பெரியவர்களுள் வேதாந்ததேசிகரும் ஒருவர். அவர் இல்லறத்தில் ஈடுபட்டிருந்தபின், மனைவியைப் பிறந்தகம் அனுப்பிவிட்டுத் துறவியாயிருந்து சமயம் வளர்த்தவராவர்.

வேதாந்த தேசிகர் ஸ்ரீரங்கநாதனின் பாதுகையை விளக்கி, ஓரிரவில் ஆயிரம் சுலோகம் பாடியவர் என்ப. இவர் சங்கல்ப சூரியோதயம் என்னும் நாடகம் எழுதி, ஸ்ரீரங்கநாதனுல் வேதாந்தசாரியர் என்னும் பட்டம் அளிக்கப்பெற்றவராவர்.

இவரின் உரைவளமும் பெருமளவினதாகும். இவர் மீமாம்சத்தை ஆத்திகச் சார்புள்ளதாக மதிக்கும் வண்ணம் பேருரையெழுதிப் பெருமை பெற்றவர். இவர் பிரமசூத்திரத்திற்கும் பகவக்கீதைக்கும் உரை எழுதியுள்ளார்.

---

சிவாகமங்களின்........

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

36. பவித்திரம் என்பதன் பொருள் என்ன?
பூசைகளில் உண்டாகும் குறைகளை நிறைவு செய்வது.

37. பவித்திரம் சாத்தும் வேளைகள் யாவை?
நித்தியம், நைமித்தியம், காமியம்.

38. சிவபெருமானுக்கு அர்ச்சிக்கக்கூடியவை எவை?
அறுகு, அட்சதை, வில்வத்தளம்.

39. அர்ச்சிக்கும்போது அவசியமானது யாது?
சிவமூலமந்திர உச்சாரணம்.

40. உத்தம ஆன்ம பௌத்திர நூல் இலக்கம் என்ன?
நூற்றெட்டு.

41. மத்திம ஆன்ம பவித்திரநூல் இலக்கம் என்ன?
ஐம்பத்தி நான்கு.

42. அதம ஆன்ம பவித்திர நூல் இலக்கம் என்ன?
இருபத்தேழு.

43. பவித்திரத்தில் பூசவேண்டிய தாதுக்கள் எவை?
செஞ்சந்தனம், குங்குமப்பூ, கஸ்தூரி, பச்சைக்கற்பூரம், கோரோசனை, மஞ்சள் முதலியன.

44. பத்து சத்திகள் என்பவர் யாவர்?
பிரகிருதி, பௌருசி, விரா, அபராசிதா, ஜயா விஜயா, அஜிதா, சதாசிவா, மனோன்மணி, சர்வதோமுகி.

45. போகவிருத்திக்காக கொடுப்பவை எவை?
கோரோசனை, குங்குமப்பூ, தாம்பூலம்.

---

**இதிகாசங்கள், புராணங்கள், வேதவாக்கியத்தை வலியுறுத்துவன.**

உ

## தசாவதாரம்

சிவபெருமானின் சக்தியே திருமால், அரியலால் தேவி இல்லை ஐயன் ஐயாறனார்க்கே என்பது அப்பர் அருள்வாக்கு. திருமால் பத்துமுறை திருவவதாரஞ் செய்தமை வரலாறு. அவை மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனம், பரசுராமன், இராமன், பலபத்திரன், கண்ணன், கற்கி என்பனவாம்.

1. மச்சாவதாரம்; சோமுகன் என்னும் அரக்கன் ஏடுகளை எடுத்து கடலில் மறைத்துவைத்த வேளை அவற்றை எடுத்துவர எடுத்த மீன் அவதாரம்.

2. கூர்மாவதாரம்: தேவர்கள், அசுரர்கள் திருப்பாற்கடலைக் கடைந்தபோது, மந்தர மலையை மத்தாகக் கொண்டனர். அதனைத் தாங்குவதற்கு ஆமை வடிவாகிய அவதாரம்.

3. வராகாவதாரம்: இரணியாக்கன் என்பான் பூமியைச் சுருட்டிவிட, அதனை விரிக்கவும் அவனைக் கொல்லவும் எடுத்த பன்றியவதாரம்.

4. நரசிங்காவதாரம்: கடவுள் வழிபாட்டைத் தடுத்த இரணியகசிபனைக் கொல்ல, கடவுள் துரும்பிலும் இருப்பார், தூணிலும் இருப்பார் என்பதை உணர்த்தத் தூணில் தோன்றிய மனுட சிங்க அவதாரம்.

5. வாமனவதாரம்; பெருங் கொடையாளியாய மாபலியின் கோட்பாடு கொள்கை மாறுபாடாக இருப்பவே அவனை அடக்குவதற்கு, காசிபன் திதி தம்பதிகளின் மைந்தனுய்க் குறள் வடிவில் வந்து மூவடி நிலம் கேட்டு, மூன்றுமடியை அவன் தலையில் வைத்தடக்கியமை.

6. பரசுராமாவதாரம்; அரசன் ஒருவன் வேதியரை அவமதிக்கவே அவன் காரணமின்றிச் செய்த அநீதியைப் போக்க, அரச பரம்பரையை நீக்க சமதக்கினி ரேணுகை தம்பதிகளிடம் பரசுராமன் எனத் தோன்றியமை.

7. ஸ்ரீ இராமாவதாரம்: இராவணன் செய்த சிறுமையை நீக்கி உலகுக்கு நல்லபாடம் உணர்த்த அயோத்தியில் இரகுவம்சத்தில் தசரதன் கோசலை தம்பதியர் வயிற்றில் ஸ்ரீராமன் எனவந்தமை.

8. பலபத்திரராமாவதாரம்; பிரலம்பன் முதலாய அரக்கர்களை அகற்றுவதற்கு வசுதேவன் ரோகிணி தம்பதியர் மைந்தனய் பலபத்திரராமன் எனவந்தமை.

9. கிருஷ்ணவதாரம்: கம்சன் முதலான வம்பர்களை நீக்கி, பாரதப்போரை நடாத்தி, நல்லவர்களைக் காப்பாற்றுவதற்கு வடமதுரையில் வசுதேவன் தம்பதிகள் வயிற்றில் கிருஷ்ணன் என்னும் கறுப்பனய்த் தோன்றி, கண்ணன் எனச் செல்லப் பெயரோடு ஆயர்பாடியில் வளர்ந்து, அற்புதங்கள், திருவிளையாடல்கள் செய்தமை.

10. கற்கியவதாரம்: அறத்தை நிலைநாட்டுவதற்குத் தோன்றி குதிரைவீரனய்க் கத்தி சுழற்றிக் கொடியவரை ஒழித்து நன்மை செய்வார் என்பர்.

உ

## மெய்ஞ்ஞானம்

புகழ்பூத்த விஞ்ஞான மேதைகள் அணுவைப் பிளப்பதற்கு முன்னமே தமிழ்க் கிழவி அணுவைப் பிளந்து என்று எப்பவோ அருமையாகப் பாடிவிட்டார். விஞ்ஞானம் உச்சநிலைக்கு வளர்ந்தபின் அணுவைப் பிளந்தார்கள். அணுவுக்குள் அணுவாகப் பரமாணுவாகவுள்ள நுண்ணணுவையும் பிளந்தார்கள். பிளந்துகொண்டே போனவர்கள் பிளப்புக்குள்ளே ஒரு சூக்குமம் இருப்பதாக உணர்ந்தார்கள். அது மனித அறிவுக்கு எட்டாத ஒன்று உண்டென உறுதியாக நம்பினர்கள்.

பரிசோதனை அநுமானம், தீர்மானம் என்னும் வகையில் விஞ்ஞானிகள் கொண்ட முடிவையே எமது முன்னோரான மெய்ஞ்ஞானிகள் என்றோ எப்பவோ கண்டார்கள். எல்லாம் எப்பவோ முடிந்தகாரியம். முழுதும் உண்மை. நாம் ஒன்றும் அறியோம். ஒரு பொல்லாப்பும் இல்லை.

இவற்றையெல்லாம் உணர்ந்த நிபுணர்கள் மெய்ஞ்ஞானம் இல்லாத விஞ்ஞானம் குருடு என்று வெளிப்படையாகக் கூறிவிட்டார்கள். யேம்ஸ்யீன்ஸ், ஹல்டேன், ஐயின்ஸ்ரீன், ஹக்ஸ்லி முதலான பெரியவர் பழைய முனிவர்களின் அடிச்சுவட்டையும் அறியமுற்பட்டார்கள்.

மேலே நீலமும் சிவப்பும் உள்ள மண்டலம் நீலமேனி வாலிழைபாகரைக் குறித்தமை முதல் விசும்பில் உலகங்கள் அந்தரத்தில் சுழலுகை, ஆகாயத்தில் ஒன்ருய், வளியிடை இரண்டாய், தீயிடை மூன்ருய், நீரிடை நான்காய், பாரிடை ஐந்தாய், பூதங்களின் சேர்க்கை விசேடங்களை முன்னரே மாணிக்கவாசகர் சொன்னவற்றை இன்று உணர்ந்துகொண்டார்கள். அம்மையப்பரே உலகுக்கு அம்மை, அப்பர் என்ற சித்தாந்தத்தையும் சிறிது சிறிதாகச் சிந்தையிற் கொண்டு வருகிருர்கள்.

ஆன்மாவைப் பற்றியோ, இறைவனைப் பற்றியோ எதுவும் சொல்லாமற்போன புல்லறிவாளரைச் சம்பந்தப் பெருமான் சாடியுள்ளார். அந்தக் கோட்பாட்டைக் கேட்கவேண்டாம் என்று அவர் அருளிப் பாடியும் உள்ளார்.

சவரக் கத்தியிலும் கூர்மையான அறிவு மெய்ஞ்ஞானம் என்பதை சோமசெற்மோம் தெளிவாகக் கூறியுள்ளார். கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்ந்த மெய்ஞ்ஞானிகளின் கூற்று எமது பொக்கிஷம். இது நம்முனனோர் அருளிச்செய்த அருஞ்செல்வம். இதை என்றும் நிலைத்து நிற்கக்கூடியதான சனதன தருமம் என்றே ஹக்ஸ்லி எழுதியுள்ளார். அம்மைகாண ஆனந்தத் தாண்டவம் செய்தருளும் அப்பன் கூத்தை, கோலத்தை அறிய முற்பட்டவர் அவர்.

மூலப்பொருள் விரிபொருளின் முழுதாய் விரிந்ததாம். அது அணுத்தரும் தன்மையில் நுணுக்கம் ஆகும்.

(2?ஆம் பக்கம் பார்க்க)

★ சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் இராசிகள் போன்றவை ★

உ

# சைவத்திற் பெண்கள்

பெண்மை என்பது தாய்மை. அது தன்னலமின்மை, சகிப்புத்தன்மை, அன்புடைமை, அருளுடைமை, இரக்கமுடைமை முதலிய நல்ல பண்புகளின் இருப்பிடமாகும். இத்தகைய நல்லியல்புகளின் சொரூபமே பெண் என்பர்.

பெண்மைக் கோலத்தை நம்முன்னோர்களும் மேற்குத்தேய விஞ்ஞானிகளும் பச்சை, நீலநிறத்தோடு சம்பந்தப்படுத்தியுள்ளார்கள். பூமாதேவி இயற்கைத் தேவி என்றெல்லாம் வழங்கியவர்கள்; கங்கை, காவிரி முதலிய நதிகளையும் பெண்மையின் பாற்படுத்தியுள்ளனர். காவிரி நதியைப் பொன்னி என்றவர்கள், வையை நதியைப் பொய்யாக் குலக்கொடி என்றனர். கங்கையைக் கங்காதேவி என்றனர். சரயு என்பது தாய்முலை அன்னது என்பது கம்பர் வாக்கு.

எல்லாம் வல்ல இறைவனின் திருவருள் வெளிப்பாட்டுக்கும் பெண்மைக் கோலத்தையே கண்கூடாகக் கண்டு, தேவி என்றும், அன்னை என்றும், அம்பிகை என்றும் திருநாமம் வழங்கினார்கள். இறைவன் திருவருள் வசத்தன், திருவருள் வழங்குபவன் என்ற அமைப்பில், இறைவனையும் தேவியையும் ஒருங்கமைய அர்த்தநாரீஸ்வரர் எனக்கண்டனர். இருதிருவுருவங்களும் ஒழுங்கமைந்த வடிவே அம்மையப்பன் திருவுருவாகும். சிவபெருமான் இடபாரூடராய் அடியவர்களுக்கு அருளிச்செய்யும் போது, அம்மையாரும் அருகிருப்பார்.

மனிதகுலம் வாழ்வாங்கு வாழ்வதற்கு இன்றியமையாது அமைய வேண்டிய வீரம், செல்வம், கல்வி என்னும் முப்பெரும் ஆற்றல்களுக்குப் பெண்மைத் திருவுருவங்களையே அதிதேவதைகளாக ஆன்றோர் கண்டுள்ளார்கள்.

வீரத்திற்கு அதிதேவதையானவளைத் துர்க்கை என்றும், காளி என்றும், மலைமகள் என்றும் வழங்கினர். செல்வத்திற்குக் கிழத்தியானவளைச் சீதேவி என்றும் இலக்குமி என்றும், திருமகள் என்றும் வழங்கினர். கல்விக்குத் தலைவியை நாமகள் என்றும், கலைமகள் என்றும், சரஸ்வதி என்றும் வழங்கினர்.

சைவசமயத்தை வளர்த்த செந்தமிழ்ப் பெண்கள் பலர் சங்ககாலத்திலேயே வாழ்ந்தனர். அவர்கள் மன்னர் தேவிகளாயும் மதிநுட்பம் வாய்ந்த மாதர் சிரோமணிகளாயும் புலவர்களாயுமிருந்தனர்.

சங்க காலத்தையடுத்து வந்த காலப்பிரிவில், களப்பிரர்காலத்தில் வேற்றுச் சமயங்கள் தமிழ்நாட்டிற் பரவிய காலத்தில், புனிதவதியார் என்னும் வணிகப் பெண் தன் இளமை அழகை நீத்துச் சைவத்தைப் பேணி வளர்த்ததோடு பக்தியிலக்கியம் பாடியருளிய பெருந்தகைப் பெண்டிராகவும் திகழ்ந்தார்.

பல்லவர் காலத்துப் பக்தியிலக்கியத்திற்குப் பாதையமைத்த பக்தையான காரைக்காலம்மை என்னும் வணிகப் பெண்ணைத் தொடர்ந்து, வேளாண்குடியில் வந்த திலகவதியார் என்பார் திருமணத்தையே நீத்து, திருக்கோயில் தொண்டு செய்து வந்தார். அன்றித் தம் பின்னவனான தம்பியார் மருணீக்கியாரைப் புறச்சமயத்தினின்றும் மீட்டுத் தீட்சை புரிந்து சைவப்பணி புரியப் பக்குவம் உண்டாக்கினார். நாவினிக்கத் திருமுறைகள் பாடியருளிய மருணீக்கியார் நாவுக்கரசர் என்னும் திருநாமம் பெற்றுச் சைவப்பெரு நாயனாராயினர். திருநாவுக்கரசு நாயனாரை உருவாக்கிய பெருமை திலகவதியாருக்கே உரியதாகும்.

திருநாவுக்கரசு நாயனார் காலத்தில் பாண்டிநாட்டில் புறச்சமயவிருள் சூழ்ந்தபோது, கூன் பாண்டியன் தேவியரான மங்கையர்க்கரசியார் சைவங்காத்ததோடு, மதம் மாறியிருந்த பாண்டியனையும் சைவத்திற்கு மீளச்செய்து, நாட்டில் வைதிக சைவச்செந்நெறி நிலைக்கச் செய்தார். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் தெய்வாம்சச் சாதனையால் நிகழ்ந்த அற்புதங்களால் பாண்டிநாட்டில் திருநீற்றின் ஒளி மீண்டும் பிரகாசித்தது. மங்கையர்க்கரசியாரும், மன்னன் பாண்டியனும், மந்திரி குலச்சிறையாரும் தொண்டராம் பெருநிலை பெற்று நாயன்மாராயினர்.

பெண்மையின் பெருமையினை ஒளவையார், தமயந்தி, சீதை, சாவித்திரி, திரௌபதை, கண்ணகி முதலிய நல்லறப் பெண்டிர்களில் காணலாம். "ஆதிப் பரம்பொருளின் ஊக்கம், அதை அன்னையெனப் பணிதல் ஆக்கம்" எனப் பாரதியார் பாடியுள்ளார். திரு வி.க. என்னும் பெரியார் பெண்மையின் பெருமையைப் பெண்களுக்கு எடுத்து விளக்கியுள்ளார். மகாத்மா காந்தியடிகள் கூறிய நல்லுபதேசங்களில் பெண்களுக்கு எனப் பேசியவையும் எழுதியவையும் அதிகம்.

சைவங்காத்த பெண்கள் வரிசையில் பிற்காலச் சோழப் பேரரசர்கள் காலத்தில் அரசமாதேவியர் மன்னர்களுக்குப் பக்கபலமாயிருந்து திருக்கோயில் பணிகள் பலவற்றை முட்டின்றி நிறைவேற்றியுள்ளார்கள். செம்பியன் மாதேவியார் திருவிசைப்பாவோடு பெருந்தொடர்பு கொண்டவர். அவர் சோழகுல மன்னர் பலரை உருவாக்கிய உத்தமி. கண்டராதித்தன் மனைவிளக்காயும், உத்தம சோழன், இராசராசன், இராசேந்திரன் முதலானவர்களை உருவாக்கிய உத்தமியாயும் இருந்தவர். இராசராசன் தனது தமக்கையாரை திருத்தமக்கையார் என்றே மெய்க்கீர்த்திகளிற் பாடப் பணித்துள்ளான். சக்கரவர்த்தியாரின் திருத்தமக்கையார் குடுத்தனவும் என்று குந்தவைப் பிராட்டியாரின் கொடைச் சிறப்புகளைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இன்னும் வானவன் மாதேவி ஈஸ்வரம் எனச் சிவாலயங்கள் தேவியர் பெயரால் அமைக்கப் பெற்றன. பெண்களின் உபகரிப்பு சைவத் தமிழை வளர்த்தது.


## வல்லபதேவன் அனுபவவுரை

இரவுக்குத் தேவையானவற்றைப் பகலில் தேடவேண்டும். முதுமைக்கு வேண்டியவற்றை இளமையில் தேடவேண்டும். மறுமைக்கு வேண்டியவற்றை இம்மையில் தேடவேண்டும்.

## ★ திருமுறையாளர் இருபத்தெழுவர் நட்சத்திரங்கள் ★

உ

# "திரிசூலம்"



சிவபெருமான் சூலபாணி. அவர் முத்தலைச் சூலத்தைத் திருக்கரத்தில் ஏந்தியவர். அடிவேறு திரிசூலம் தோன்றும் வளர்சடைமேல் இளமதியம் தோன்றும் என்று அப்பர் திருமுறைபாடுமாறு சிவன் காட்சி கொடுத்துள்ளார். திரிசூலம் சிவபெருமானின் அதிகாரச் செங்கோல். அது முக்குணங்கள் கொண்டது. ''குணம் ச திரி சூலக'' என ஒருதொடர் வழங்குவதுண்டு. மூவுலகங்களையும் ஆளுகின்ற முக்கண் மூர்த்திக்கு முத்தலைச் சூலம் இச்சை, ஞானம், கிரியையென்பன வற்றைக் குறிப்பது. சிவதர்ம பரிபாலனத்துக்குத் திரிசூலம் இலச்சினையாகும். அது ஆற்றல் வாய்ந்த ஆயுதமுமாம். சிலர் அதுவே பாசுபதாஸ்திரம் என்றும் பகர்வர்.

ஆலயங்களில் வைரவர் என்றும் பைரவர் என்றும் வழங்கும் கடவுள் முத்தலைச் சூலவடிவினர். இவர் கோயில் காவலாளி. க்ஷேத்திர பரிபாலகர். இவர் திருக்கோயிலைக் காவல் செய்வதை ஆனந்த கோலாகலமாயிருந்து செய்வதால் இத்தொடர் இவருக்குரிய மந்திர வரிசையிலும் இடம்பெற்றுவிட்டது. அர்த்த சாமப் பூசை நிறைவேறியதும் திருக்கோயில் திறப்புகள் இவரிடமே ஒப்படைக்கப்பெறுகின்றன. இவருக்கு வாகனமாயமைந்ததும் காவலுக்கு வீரனுன நாய்தான். போத்துக்கேயர் செய்த அழிவுகளால் ஊர்கள் தோறும் வைரவர்கோயில்கள் அதிகரித்தன. பட்டி தொட்டியெங்கும் பைரவர் கோயில்கள் வழிபடு மிடங்களாயின. சிவபெருமான் கொண்டருளிய மூர்த்தங்களுள் வைரவமூர்த்தம் சிவாம்சமானதே. அது பிரம தேவனின் அகந்தையை நீக்கியது, ஒருதலைகிள்ளி, வலிமையைக் குறைத்து அவரை நல்லவராக்கியதோடு நான்முகனுக்கியும்விட்டது.

## அகோர சிவாசாரியர்

ஆதிசைவக் குருமார் மரபில் வந்து பதினெட்டுப் பத்ததிகள் செய்தருளிய பெரியவர்களுள் இவரும் ஒருவர். மூவகைத் திட்சையும் முறையாகப் பெற்ற இவரின் சிவாசரிய திட்சா நாமம் அகோரசிவம். இவர் செய்த பத்ததி இவர் பெயரால் அகோரசிவாசாரியர் பத்ததி என வழங்கி, கிரியைகளைப்பற்றி விபரமாகக் கூறுகிறது. அபர கிரியை வழியில் இவரின் உபகரிப்பு அருமையானது.

அகோரம் என்பது சதாசிவ மூர்த்தத்தின் ஐம் முகங்களில் ஒன்று. வெண்மை கலந்த முகத்தவர், அஞ்சத்தக்க கோலத்தவர், மண்டையோட்டு மாலை, கேடயம், சூலம், கோடரி, சுத்தி, தண்டு ஏந்திய தோள் வீரர்.

## அஸ்திர தேவர்

அத்திர தேவர் என வழங்கும் இவர் தெய்வப் படைக்கலங்களின் தேவர். திருக்கோயில்திருவிழாக்களில் சுவாமி எழுந்தருளி வீதியுலா வருவதன்முன் சப்தபூசையோடுஇவர்முதலில் வலம்வருவார். தீர்த்த நாளில் இவரே அபிடேகஞ் செய்யப்பெறுகிறுர். இவர் படைக்கல வடிவான மூர்த்தி.

## மெய்ஞ்ஞானம்

(18ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றிணைந்த ஒருமைப்பாட்டுக்குள் கட்டுப்பட்டு உலகின் பல்வேறு இயக்கங்கள் நடைபெறுவதை அன்று ''படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்து நீ கொடுகொட்டி ஆடுங்கால் கொண்டசீர் தருவாளோ?'' என்று அப்பன் ஆட்டத்தோடு சத்தியின் கட்டுப்பாட்டையும் கலித்தொகைப்பாயிரம் பாடிற்று. அவனன்றி ஓரணுவும் அசையாது. அவன் அசைவிலேயே எல்லாம் அசையும். உலகத்தை ஆக்கியும் இயக்கியும் வருகின்ற ஆற்றலைத் திருவள்ளுவர் ஆதிபகவன் முதற்றே உலகு என்றுர்.

## பிருந்தாவனம்

வடஇந்தியாவில் டெல்கி நகரத்துக்குத் தெற்கில் மதுரை நகரினருகில் யமுனையோரத்தில் உத்தரப் பிரதேசத்தில் உள்ள நகரம். இது கிருஷ்ணன் நந்த குமாரனுய் விளையாட்டயர்ந்த இடமாகும். இங்குள்ள பல கோயில்களுள் கோவிந்த தேவமந்திர் என்பது பெரும் புகழ்பெற்றது. இதனை இராசா மான்சிங் என்பார் பதினரும் நூற்ருண்டிற் கட்டினுர் என்ப. சென்ற நூற்ருண்டில் கன்னியாகுமரி முதல் இமயம் வரை சைவத் தமிழ் புரிந்த தமிழ்நாட்டு வணிகர் என்னும் நாட்டுக் கோட்டையார் அரங்கநாதர் கோயில் என ஒன்றைக் கட்டித் தமிழ்நாட்டுத் திருவிழா முறைகளை அங்கே பழக்கியிருக்கிறுர்கள். தமிழ்ப்பண்பாட்டு முறையில் அங்கே நடைபெறும் விழாக்கள் அப்பிரதேச மக்களுக்கேயன்றிப் பிறநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கும் விருந்தாயுள்ளன.

## சத்தபுரிகள்

இந்துப் பண்பாட்டில் ஏழு தலங்களை மிக முக்கியமானவை என்னும் கருத்தில் சத்தபுரங்கள் என வகுத்தனர். அவை அயோத்தி, மதுரை, மாயா, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்பனவாம். மதுரை என்பது வடக்கே உள்ள பெரிய நகரம்.

உ

# இதிகாசங்களிற் சைவம்

சைவ சமயத்துக்குப் பொதுநூல் வேதங்கள். ஆகமங்கள் சிறப்பு நூல்களாயுள்ளன. வேதங்களையும் ஆகமங்களையும் ஏற்றுக்கொண்டவையே அகச்சமயங்கள் ஆறும். ஆறும்மாறுவீறுடையவை என்றும், சைவம் மாதி இருமூன்று என்றும், சமயம் ஆறனையும் தாயென வளர்த்து என்றும் வருந்தொடர்கள் அகச்சமயங்களைக் குறிப்பனவாம்.

அகச்சமயங்கள் ஆறும் வேறு, சங்கராசாரிய சுவாமிகள் பிற்காலத்தில் தாபித்த ஆறு சமயங்கள் என்னும் சண்மதங்கள் வேறு. அவற்றை இவற்றோடு கலந்து பாரம்பரியப் பண்பாட்டைப் பழுதாக்குதலாகாது.

இதிகாசங்கள் புராணங்களைப் போலவே வேத வாக்கியப் பொருளை வலியுறுத்துவன. வேதம் சைவ சமயத்தின் நெறி. அந்தப்பெரிய வேத நெறியிலே சைவம் ஒருதுறை. வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க என்பது பெரியபுராணம்.

இதிகாசம் "இவ்வாறு முனிவர்கள், பெரியவர்கள், மன்னர்கள், மக்கள் வாழ்ந்தார்கள்" என்று பிற்காலத்தவர்களுக்குக் கூறுவன. இதிகாசங்களைப் போலவே புராணங்களும் பழைமையானவை. புராணங்களையும் இதிகாசங்களையும் சேர்த்துப் புராணேதிகாசங்கள் என வழங்குவார்கள்.

புராணங்கள் பதினெட்டாகும். வேதங்களை நான்காக வகுத்த வியாசரே, ஐந்தாம் வேதம் என்னும், பாரதத்தையும் செய்தவர். அவரே பதினெண் புராணங்களையும் செய்தவராவர். அவர் தவசிரேஷ்டரான வசிஷ்டமுனிவர் பரம்பரையில் வந்தவர். வசிஷ்டர், சத்தர், பராசரர், வியாசர், சுகர் எனவந்த பரம்பரை பெரிய ஞானியர் பரம்பரை.

இதிகாசங்கள் மூன்று, அவை சிவரகசியம், இராமாயணம், மகாபாரதம் என்பனவாம். சிவரகசியம் பெயருக்கேற்பச் சிவபரத்துவங் கூறுவது. அது பரமேதிகாசம் எனவும் வழங்குவது.


இராமாயணம் வான்மீகி முனிவராற் செய்யப்பெற்றது. அது இராமாவதாரப் பெருமையைக்கூறுவது. பாரதம் கிருஷ்ணாவதாரப் பெருமை கூறுவது. இவை இரண்டும் திருமால் பெருமை கூறுவனவேயாயினும், சிவபரத்துவங் கூறி வணங்குவதில் தவறவில்லை.

இரட்டை இதிகாசங்களாய இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றுள் காலத்தால் முந்தியது இராமாயணம். இதனை ஆதி காவியம் எனவும் வழங்குவர். இதிகாசங்கள் முதலில் வடமொழியிலேயே எழுந்தன. இவற்றைத் தமிழில் தந்தவர்கள் முறையே கம்பர், வில்லிபுத்தூரர் என்பவர்களாவர். இருவரும் ஆசைபற்றியே இவற்றைத் தமிழ்கூறும் நல்லுலகத்திற்குத் தந்தார்கள். இருவரும் விஷ்ணுபக்தியிற் சிறந்தவர்கள். ஆகவேதான் இவர்களைக் கம்ப நாடாழ்வார் எனவும் வில்லிபுத்தூராழ்வார் எனவும் வைஷ்ணவர்கள் போற்றினார்கள்.

இனி இதிகாசங்களிற் சைவம் என்பதை ஆராயும்போது கம்பர், வில்லிபுத்தூரர் என்னும் இருபெயர்களும் சிவபெருமானுக்கே உரியவை என்று கூறுவாரும் உளர்.

கம்பர் தமது இராமகாதையில் சிவபெருமானைப் பற்றி 395 இடங்களிற் பாடியிருக்கிறார் என்றும், வில்லி தமது மகாபாரதத்தில் சிவனைப்பற்றி 168 இடங்களிற் பாடியிருக்கிறார் என்றும் ஆராய்ந்தவர் ராய. சொ. என்னும் பெரியார்.

புலவர்கள் இருவரும் இன்னும் பலவிடங்களில் பாத்திரங்களின் கூற்றாகவும் சிவன் புகழைப் பாடியுள்ளார்கள்.



## இராமாயணம்

கம்பர் தாம்கண்ட சிவனை, ஊழிமுதல்வன் என்றும், முழுமுதற் கடவுள் என்றும் பாடியதோடு, சிவனுறையும் கயிலையையும், ஈறிலான் கயிலை என்று இணைத்துப்போற்றுவர்.

"நண்ணுதல் அருங்கடல் நஞ்சம் நுங்கிய கண்ணுதல்" என்று சிவபெருமானின் வீரத்தைப் போற்றுவர். இன்னும் முழுமுதல், முருகன்தாதை என்றெல்லாம் பாடுபவர், மெய்கண்டார் சொன்னவண்ணம் சங்கார காரணனே முழுமுதல் என்பர். சிவன் எல்லாவற்றையும் ஒடுக்குபவர். அவர் ஒடுங்கி எனச் சைவ சித்தாந்தத்தில் போற்றப் பெறுபவர்.

"ஊழிக்கடை முடிவில் தனி உமைகேள்வன், ஊழி நெருப்பின் உருத்தன், ஊழியின் இறுதிக்காலத்து

(22ஆம் பக்கம் பார்க்க)

**இராமாயணம்**

(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உருத்திரமூர்த்தி, மண்ணும் வானமும் மற்றைய பிறவும் தன் வாய்ப்பெய்து, உண்ணும் காலத்து அவ்வுருத்திரமூர்த்தி, சூலமும் மழுவும் தாங்கித் தோள் இருநான்குந் தோன்ற மூலம்வந்துலகை உண்ணும் உருத்திரமூர்த்தி, பேய்மொய்த்து நாய்கள் ஈண்டி பெரும்பிணம் பிறங்கித்தோன்றும் ஈமத்துள் தமியன் நின்ற கறைமிடற்று இறைவன், நஞ்சுஅட எழுதலும் நடுங்கி நாள்மதிச் செஞ்சடைக் கடவுளை அடையுந் தேவர்கள், மூவாமுதல் ஈசன், மான்மறிக்கரத்து வள்ளல், கண்ணுதற் பெருங்கடவுள் என்றெல்லாம் பரவிப் பாடுவர்.

இராமாயண கதாபாத்திரங்களில் ஒருவனாய இராவணன் பெரிய சிவபக்தன். அவன் முன்னோ நம் குடும்பத்தினரும் வழித்தோன்றல்களும் சைவர். இராவணன் திருநீற்றை நிறையப் பூசிச் சிவபூசை செய்தவன். இராவணன் மேலது நீறு என்று தேவாரம் பாடிய வகையில் அவன் தேவி மண்டோதரிக்குச் சிவபெருமான் பேரருள் சுரந்தமையைத் திருவாசகம் பாடும்.

ஈசனை இமையா முக்கண் இறைவனை இருமைக்கு ஏற்ற பூசனை முறையிற் செய்து, என்றும் பூசனைத் தொழில் புரிந்து, தான் முறைமையிற் போற்றும் ஈசனைத் தொழுது என்றும் கம்பர் சிவனைக்குறிப்பர். இன்னும் உமைக்கு ஒருபாகத்து ஒருவனை அர்த்த நாரீஸ்வரர் என்று விளக்குவர். ஈறில்லாதவன் ஈசன் ஒருவனே எனத் தேவாரம் அருளும் வகையில் கம்பர் சிவனை வேதம், தேவர், முனிவர் முதலானோர் புகழ்வர் என்பர்.

செஞ்சடைக் கடவுள் என்றும், செங்கண் ஏற்றவன் என்றும் சிந்தை இனிக்கப் பாடுவர். நெற்றிக் கண்ணைக் கடவுள் நுதல்கிழித்த விழி என்பர். சிவதனுசை வெள்ளம் அணைத்தவன் வில் என்பர். மேலும் போற்றும்போது மலைமகன் கொழுநன், கங்கைவார் சடையோன், கற்றைவார் சடையினன் என்பர். இராமன் வில் வளைத்தபோது, தேவதேவன் வில் ஒடித்த செல்வன் என்பர். இன்னும் திங்கள்சூடிய செல்வன், கறுத்த மணிகண்டன், புலியின் அதள் உடையான், வெண்கயிலைப் பொறுப்பீசன், ஆலம் மிடற்றான், இடபம் உந்தும் கடவுள், அறிவு முற்றிய பித்தன், உலகை உண்ணும் உருத்திரன், கொன்றை அலங்கலான், மூவாமுதல் ஈசன், உலகெலாம் தீக்கும் ஐம்முகன், புரம்சுடும் ஒருவன் என்றெல்லாம் அர்ச்சனை மாலைபோல் பாடுவர்.

இனி இராவணன் சிவனைப்போற்றும் வகையில் கம்பர் பாடுவர். மூவரில் பெற்றம் உடையவன், சூலம் ஏய்தடக்கை அண்ணல், விழிதரும் நெற்றியான், கடுவைமிடற்றில் வைத்த தக்கோன், கங்கையும் பிறையையும்சூடும் கண்ணுதல் நெற்றியில் அழலும் செங்கண் நீறணி கடவுள், காலன் ஆற்றல் கடிந்த கணிச்சியான், நஞ்சினை மிடற்றுவைத்த நகைமழுவாளன், துண்டம் கொள் பிறையான், ஓரம்பில் புரம்சுட்ட ஒருவன், இறுதியும் காவலும் இயற்றும் ஈசன் என்றெல்லாம் கூறுவர்.

இனி நீதியால் வந்த நெடுந்தரும நெறியறிந்த வீபீடணன் சிவனைப்போற்றும் வகையில் கம்பர் பாடும்போது, திருநான்மறையின் நெறியே திரிவார், தாள்சடைக் கடவுள், விடைவருபாகன், புள்ளிமான் உரி ஆடையன், வேதத்தலைவரும் உணரும் சிவன், பிறைசூடும் பிஞ்ஞகன் என்றெல்லாம் குறிப்பர்.

இனி தவசிரேஷ்டர்களான வசிஷ்டர், விசுவாமித்திரர் ஆகியோர் கூற்றுகப் பாடும்போது, பொன்சடை நின்மலக்கொழுந்து, வால உணர்வுமேல் முடுகினர், அவிர்மதி அணிந்த தூயவன் என்றெல்லாம் பாடும்போது, சிவபரத்துவத்தை கண்ணுதற்கன்றி அரிது பரத்துவம் என்பர்.

இன்னும் சொல்லின் செல்வனாய் அநுமன் சொன்னதாகப் பாடும்போது, காலன் காலமும் அறுக்கும் புங்கவன், நல்மத்தம் நாகம் தலைசூடிய நம்பன், காலமும் கணக்கும் நீத்த காரணன், விடம்துடிக்கின்ற கண்டத்து அண்ணல் என்றெல்லாம் உருகி உருகிப் பாடுவர்.

இனி நிகும்பலையாகம் செய்த நிபுணன் இந்திரசித்தன் மற்றும் பாத்திரங்கள் போற்றிய சிவபரத்துவம் பரந்தவை, பக்திமயமானவை, பரவ இனியவை, பண்பாடு காப்பவை.

## அருள் சுரக்கும் இந்து மதம்

அருள் சுரக்கும் அன்பு மதம்
அகிலத்தின் மூத்தமதம்
ஆன்மிகப் பயிர் வளர்க்கும்
அன்புமதம் அறிவுமதம்
இருள் நீக்கி ஒளி நிறைக்கும்
இனியமதம் இந்துமதம்
ஈடு இணையற்ற மதம்
ஈர்த்துலகைச் சேர்க்கும் மதம்
உண்மைகளைச் சொல்லும் மதம்
உயர்ந்தோங்கி நிற்கும் மதம்.

ஊருலகம் வாழ்வதற்கு
உறுதுணையாய் நிற்கும் மதம்
எல்லோர்க்கும் நீதி சொல்லும்
ஏற்றமுள்ள இந்துமதம்
ஏழிசைக்குள் இருப்பவனை
எளிமையுடன் காட்டும் மதம்
ஐம்புலனை வெல்லவழி
ஐயமின்றிச் சொல்லும் மதம்.

ஒற்றுமையை உணர்த்தும் மதம்
ஒளிவிளக்காய் உள்ள மதம்
ஓங்காரப் பொருள் விரித்து
உலகெங்கும் வாழும் மதம்
ஒளவியம் பேசாதிருக்க
அறநெறிகள் கூறும் மதம்
ஆன்றகன்ற நுண்ணியனை
ஃஆயுதத்தில் காட்டும் மதம்

— கவிஞன் கௌமாரிதாசன்

★ முதற்சாதனம் திருநீறுகலில் ஆதிமுதலாம் திருநீறு ★

## சோட சோப உபசாரம்

இறை வழிபாட்டில் எத்தனையோ முறைகள் வழக்கத்தில் வந்துள்ளன. பல்லாயிரவர் கூடி நின்று பக்தி வசப்பட்டு வணங்குமிடங்களான ஆலயங்கள், மடங்கள் முதலான இடங்களில் பக்தர்களைக் கவரக் கூடியனவான நடைமுறைகள் நிலவுகின்றன.

முன்னர் பாடல்வீணையர், பலபல சரிதையர் எனத் திருமுறைகளில் வரும் ஆடல் பாடல் முதலிய ஒழுக்கவரலாறுகளின் வேறுய் உபசார வகைகள், ஆகமங்கள், பத்ததிகளில் வந்துள்ளன.

சோடசோபசாரம் என்பது சட்தச உபசாரமாகும். அஃதாவது பதினறு வகைப்பட்டன என்க. அவை பின்வருமாறு அமையும் என்பர்.

| | |
|---|---|
| 1. ஆவாகனம் | 9. தூபதீபம் |
| 2. ஆசனம் | 10. நைவேத்தியம் |
| 3. பாத்தியம் | 11. பலிபோடுதல் |
| 4. ஆசமனம் | 12. ஹோமம் |
| 5. அர்க்கியம் | 13. ஸ்ரீபலி |
| 6. அபிஷேகம் | 14. கேயம் வாத்தியம் |
| 7. வஸ்திரம் | 15. நர்த்தனம் |
| 8. புஷ்பார்ச்சனை | 16. உத்வாசனம் |

இவற்றைக் கருத்தோடும் கவர்ச்சியாகவும் செய்கின்ற அர்ச்சகர், மந்திரம், கிரியை, பாவனை நன்கறிந்தவராயிருப்பர். இவற்றைப் பார்த்த பலனுக்காகப் பக்தியோடு செய்யும் போது அங்க அசைவுகள் நிதானமாக அமைவாக இருத்தல் வேண்டும்.

பதினறு வகைப்பட்ட உபசாரங்களின் போது பிரதானமாக வசந்தமண்டபபூசையின் போது, குடை கொடி, விசிறி, கண்ணடி, சுருட்டி, அப்தாகிரி, சாமரம், அர்க்கிய பாத்திரம், தீபம், தூபம், நாகதீபம், யானைதீபம், அலங்காரதீபம், ரிஷபதீபம், அன்னதீபம், புருஷதீபம், குதிரைதீபம், மயில்தீபம், ஐந்துதட்டு, பூரணகும்பம், கோழிதீபம், சிங்கதீபம், நட்சத்திர தீபம், கர்ப்பூரஆரத்தி மேருதீபம் ஏழுகிளைக் கர்ப்பூர ஆரத்தி முதலியன உபயோக மாகின்றன.

## எங்கெங்கே காணிலும் சக்தி

| | | |
|---|---|---|
| கிழக்கு | — | இந்திராணி |
| தென்கிழக்கு | — | அக்கினிதேவதை |
| தெற்கு | — | வராகி |
| தென்மேற்கு | — | கட்கதாரிணி |
| மேற்கு | — | வாருணி |
| வடமேற்கு | — | மிருகவாகினி |
| வடக்கு | — | கௌமாரி |
| வடகிழக்கு | — | சூலதாரிணி |
| மேலே | — | பிரஹமாணி |
| கீழே | — | விஷ்ணுசக்தி |
| முன்பக்கம் | — | ஜயாசக்தி |
| பின்பக்கம் | — | விஜயாசக்தி |
| இடப்பாகம் | — | அஜிதா |
| வலப்பக்கம் | — | அபராஜிதா |

## சிவதீட்சை

மந்திரங்கள் நம்மைக் காக்கின்றன. அவை நினைப்பவனைக் காக்கும் தன்மையினுல் மந்திரங்கள் எனப்பெயர் பெற்றன. மந்திரங்களைச் சுத்தமாக, தூய்மையாக, ஆசாரமாக இருந்து நினைத்தல், சொல்லுதல்வேண்டும்.

மந்திரங்களை நினைக்கவும் சொல்லவும் கேட்கவும் நமக்குத் தகுதிவேண்டும். தகுதியைத் தருவது தீட்சை. சைவசமயத்தவருக்கு அவசியமான முதல் தீட்சை சிவ தீட்சை. அதைச் சமயதீட்சை என்றே வழங்குவர். நம்மிடத்தில் திருவருள் பதிவதற்குத் தீட்சை அவசியம் வேண்டியது.

சம்ஸ்காரங்கள் எனப்படும் நற்கருமங்கள் செய்வதற்குத் தீட்சை யோக்கியத்தையும் தகுதியையும் தருகிறது. தீட்சை மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது. தீட்சை கொடுப்பவரே குரு. தீட்சை பெருமல் மந்திரங்களைக் கூறினுல் அவை பயன் தர மாட்டா.

தீட்சை கொடுப்பவர் அக்கினி காரியத்தோடு கொடுக்கும் போது அது ஔத்திரி தீட்சை எனப்பெயர் பெறும். அக்கினி தீட்சை பெறுபவரைச் சுத்திகரித்து விடும். அவர் புடம் போட்ட பொன் போல ஒளி பெறுவர். அக்கினி தேவதூதன். அவர் புரோகிதர். சிவாக்கினி சிவலிங்கம் போன்றது.

தீட்சாகுரு சிவபெருமானிடம் உத்தரவு பெற்று, தீட்சை பெறு வோரின் உள்ளத்திற் புகுவர். குரு சொல்லித் தரும் பிரணவமந்திரம் ஆன்மாவைக் கடவுளோடு சேர்க்கும். ஆன்மா அம்பு போலப் பறந்து போவதற்கு பிரணவமந்திரம் வில்போல அமையும். விண்வெளிக்குக் கலன்களை அனுப்பும் ரெக்கற்றை நாம் அறிவோம்.

குருவின் அருட்பார்வை ஆணவமலத்தின் வலிமையைக் கெடுக்கும். குரு திருநீறு தரும்போது எமக்கு நல்ல குணங்கள் உண்டாகும். அவர் தர்ப்பையினுல் தடவும் போது நல்ல குணங்கள் நம்மில் நிலைக்கும்.

தீட்சை பெற்று அநுட்டானம் செய்யத் தொடங்கியதும் முகம், மூக்கு, கண், காது, வயிறு, மார்பு, புயங்கள், தலை முதலிய உறுப்புக்களைத் தொடும் போது, பொறிபுலன்கள் புனிதமடைகின்றன. இவற்றைக்காத்து நிற்கும் அதிதேவதைகள் மகிழ்ச்சியடைகின்றனர்.

## இவற்றுட் சிறந்தது இது

| | | |
|---|---|---|
| வேதங்கள் | — | சாமம் |
| யாகங்கள் | — | அசுவமேதம் |
| மலைகள் | — | மகாமேரு |
| நதிகள் | — | கங்கை |
| பூதங்கள் | — | ஆகாயம் |
| விண்ணவர் | — | இந்திரன் |
| விழாக்கள் | — | சிவராத்திரி |

★ பரமுத்தி என்பது திருவடிப்பேறு மீளாநிலை பேராவியற்கை ★

உ

# திருஞானசம்பந்தர் தேவாரத்தில் சைவசித்தாந்தம்

இலக்கியம் கண்டு இலக்கணம் இயம்பினர் என்பதற்கு எள்ளிலிருந்து எண்ணெயை உதாரணம் கூறினர். முன்னரே எழுந்து நிலவிய பலவாய இலக்கியங்களிலிருந்து வடித்த திரட்டே இலக்கண நூல்களாகும்.

இவ்வாறே சைவசமய திருமுறைகளிலிருந்து வடிக்கப்பெற்றதே சைவசித்தாந்தக் கோட்பாடு என்பர். சைவசித்தாந்த தத்துவ உணர்வு தமிழகத்தில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றிப் பரவி நிலவிய மெய்யுணர்வாகும்.

சங்க நூல்களிலும் திருக்குறளிலும் சைவ சித்தாந்தத்தைக் கருத்தூன்றிக் கற்றறியலாம். தமிழ் நாட்டில் காஞ்சிபுரத்து அன்பர் வச்சிரவேலு முதலியார் ''திருக்குறள் உட்கிடை சைவ சித்தாந்தமே'' என்று எப்பவோ எழுதியுள்ளார். திருக்கைலாய பரம்பரைத் தருமபுர வாதீனத்து மகா சந்நிதானம் அவர்கள் தேவாரத்துள் தத்துவ விளக்கம் என நுட்பமாகக் கட்டுரை எழுதியுள்ளார்.

தத்துவங்கள் முப்பத்தாறு. அவற்றுள் இருபத்து நான்கு தத்துவங்களைத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் ஒரு தேவாரத்தில் தேக்கித்தந்துள்ளார்.

மண், புனல், அனல், கால், வெளி என்னும் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகிய பூதங்கள் ஐந்து. மெய், வாய், கண், மூக்கு, செவி என அறிகருவிகள் ஐந்து. வாக்கு, கை, கால், எருவாய், கருவாய் எனத் தொழிற்கருவிகள் ஐந்து. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனத் தன்மாத்திரைகள் ஐந்து. மனம், புத்தி, சித்தம் அகங்காரம் என்னும் அந்தக் கரணங்கள் நான்கு.

இவை எல்லாமாகவுள்ள இருபத்து நான்கும் ஆன்ம தத்துவங்கள் எனப்படும். இவற்றை அடக்கிக் கூறியருளும் தேவாரம் இதோ.

திருச்சிற்றம்பலம்

புவிமுதலைம் பூதமாய்ப் புலனைந்தாய்
நிலனைந்தாய்க் கரணம் நான்காய்
அவையவைசேர் பயனுருவாய் அல்லஉரு
வாய்நின்றான் அமரும் கோயில்
தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழவிடு
கொம்புதைப்பக் கொக்கின் காய்கள்
கவணெறி கற்போற்சுனையில் கரைசேரப்
புள்ளிரியும் கழுமலமே.

திருச்சிற்றம்பலம்

# சிந்து வெளிநாகரிகத்தில் ஒருசின்னம்

எருது பயிர்த்தொழிலில் பயன்தந்த மிருகம். அது பழைய சிந்துவெளி மக்கள் மத்தியில் தெய்வத்தன்மை வாய்ந்ததாகக் கருதப்பெற்றது. சிவபெருமான் யோகத்தில் அமர்ந்திருக்கும் கோலத்தைப் பொம்மை வடிவிற் செய்த சிந்துவெளி மக்கள், அவரைச் சூழஇருந்த விலங்குகளுள் எருதையும் செய்தனர். சிவபெருமான் பசுக்களாய ஆன்மாக்களுக்குத் தலைவன் என்பதை அவையாவும் குறிப்பிடுகின்றன என்பர். சிந்து வெளி நாகரிக மக்கள் முப்பொருளுணர்ந்தவராவர். ஏரி பெருத்த எருது கெம்பீரமாக உள்ளது. அது சுமேரியர் முத்திரைகளிலும் காணப்பெறுகிறது.

## இந்துநாகரிக வியாபகம்

பாரதநாட்டு இந்து நாகரிகம் பக்கத்து நாடுகளில் பரவியதோடு, தென்கிழக்காசிய நாடுகள், தூரகிழக்காசிய நாடுகள், மேற்கு நாடுகள் எங்கும் வெகுவாகப் பரவியமை ஒருகாலம். இங்ஙனம் பரவிய விசேடத்தினலே இந்தியாவும் அகன்ற பாரதம், பெரிய பாரதம் தீவாந்திர பாரதம் என்றெல்லாம் பெயர் பெறுவதாயிற்று. இன்னும் இந்திய ஆசியா என்னும் பெயரும் உண்டாவதாயிற்று.

முன்னர் தமிழ் வணிகர்களுள் சாத்து என்னும் கூட்டு வணிகம் நடைபெற்றது. அண்மைக்காலப் பொருளாதாரத்தில் வரைவுளது என்று நிறுவனங்கள் குறிக்கப்பட்ட பங்காளர்களைக் கொண்டு நடத்துகின்ற வகையில் அக்காலத்தில் நாநூற்றுவர், ஐந்நூற்றுவர், அறுநூற்றுவர், எழுநூற்றுவர், நானுதேசிகள், திசையாயிரவர் என்ற நிறுவனங்கள் இயங்கின. (இந்த வகையில் எழுநூற்றுவர் என்பவர் விஜயன் என்பான் தலைமையில் இலங்கைக்கு வந்திருக்கலாம் என்பதும் ஆராய்வுக்குரியதாகும்.)

## தென்னுசிய தென்கிழக்காசிய நாடுகளில் இந்து நாகரிகம்

அந்நாடுகளில் நெடும் பண்டைக்காலமாக நிலவி வரும் கர்ணபரம்பரைக் கதைகள், கல்வெட்டுச் செய்திகள், மக்களிடையே வழங்கிவரும் பழக்கவழக்கங்கள், அவர்களின் மொழிகளில் கலந்து ஒலிக்கின்ற இந்திய சொற்கள், அவர்களின் இலக்கியங்களில் பயின்றுவரும் இந்திய நாட்டுப் பண்பாட்டுப் பாத்திரங்களில் வரலாறுகள், சிற்பக்கலைகளில் களிநடம் புரியும் சங்கதிகள் முதலிய யாவும் இந்து நாகரிகம் அங்குப் பரவியமைக்குத் தக்க சான்றுகளாகும்.

## பதினறுபேறு

புகழ், கல்வி, வலிமை, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள்

★ சமண, பௌத்தருக்கு ஆகாயம் உடன்பாடன்று ★

மில்க்வைற் நிலையம்

MWS MILKWHITE

## அறுபது ஆண்டுகளாகக் கேட்டுப்பழகிய பெயர்




முதன்முதலாக
நிலங்கலந்த சவர்க்காரம் செய்தவர்கள்,
இன்று

- ★ பார் சோப்
- ★ நியூ மில்க்வைற் சோப்
- ★ சுப்ப மில்க்வைற் சோப்
- ★ மினி பார் சோப்
- ★ சலவைப் பவுடர்
- ★ நீம் சோப்

இன்னும் இன்னும்

★ ஸ்நானப் பவுடர் ★ நீம் தூபம்

ஸ்நானப் பவுடர் எண்ணெய்தேய்த்து முழுகும்போது
தலையில் அழுக்கு, பிசான், சொடுகு போக்குவது.
(எலுமிச்சம் கோது, வெந்தயம் முதலியன சேர்ந்தது)

நீம் தூபம் (வேப்பம்முத்து, சாம்பிராணி, அகில் முதலியன சேர்ந்தது)
கொசு, நுளம்பு, பூச்சிகளைப் போக்குவது.
சாம்பிராணிபோலத் தணலில் புகைப்பது.

உ

# பின்னணி

ஈழமாதா ஈன்ற இணையற்ற ஞானியும், சித்தர் பரம்பரையைப் பாது காத்த பெருஞ்சித்தரும், சமூகசேவையில் பெரும் பரோபகாரியுமான சிவ யோக சுவாமிகள் கேட்டார், "ஓய்காணும் நீர் எத்தனை புத்தகங்கள் வாசித்து, ஒரு கட்டுரை எழுதுவீர்?" ஐந்து அல்லது ஆறு. "நீர் எத்தனை புத்தகங்கள் வாசித்து ஒரு புத்தகம் எழுதுவீர்?" நாற்பது. "அப்படியானால் நீர் புத்தகப் பூச்சியோ, பொறுக்கித் தின்னியோ?" சுவாமிகள் தருகின்ற பட்டத்தை ஏற் றுக்கொள்ளுகிறேன். "பொறுக்கித்தின்னி! போய் நன்றாக எழுதும் காணும்." இது பட்டமளிப்பும் பாராட்டும் ஆசியுரையுமாகும்.

தந்தையார் இளவயதில் இறந்துபோகத் தாயார், தன்னையொறுத்து என்னை வளர்த்தார். தமையனார் க. சி. குலசேகரம் தம்மைப்போல நானும் ஆங்கிலம் பேசவேண்டும் எனக்கருதிப் பரமேஸ்வராக் கல்லூரிக்கு அனுப் பினார். சமய பாடம் படிப்பித்த சுவாமி உருத்திரகோடீசுவரர் நல்லொழுக்கம் கற்பித்தார். நவநீதகிருஷ்ணபாரதியார் நற்றமிழ் நல்கினார். நன்றாகப் படித்த என்னை 1930 - இல் அகத்தியர் என்றார். துரைசுவாமி சாஸ்திரிகள் நல்ல முறையில் சமஸ்கிருதம் தொடக்கினார், சிதம்பரசாஸ்திரிகள் தொடர்ந்து கற்பித்தார், சீதாராமசாஸ்திரிகளிடம் வீடு தேடிச்சென்று ஓரளவு கற்றேன். சைவப் பெரியார் மேலைப்புலோலி சு. சிவபாதசுந்தரம் அவர்கள் சமயபாடம் கற்பித்தார். அவரிடம் விடாப்பிடியாய்ப் படித்தும் தாகம் தணியவில்லை. படிப்பில் ஆர்வமும் பணத்தில் முடையும் கண்டறிந்த அதிபர் நடேசபிள்ளை, இலவசமாகப் படிக்க அனுமதித்தார். ஆங்கிலப்படிப்பு ஓரளவு நிறைவான போது, பல்கலைக்கழகக் கல்லூரியிற் சேரப் பணவசதியில்லாமையால், சைவா சிரிய கலாசாலையில் ஆசிரியராவதற்குச் சேர்ந்தேன். அதிபர் சுவாமிநாதன், உப அதிபர் கைலாசபிள்ளை, தமிழ்தாதா பண்டிதமணி கணபதிப்பிள்ளை, குழந்தையுள்ளம் உள்ள கந்தசாமிஐயர் பயிற்சி தந்தார்கள். சமய அறிவின் தரம் அறிய 1946 ஆம் ஆண்டில் சென்னை சைவசித்தாந்த சமாஜப்பரீட்சை எடுத்தபோது, முதற்பிரிவில் சித்திபெற்ற சைவப்புலவர் ஆனேன்.

புத்தகம் எழுத வல்லவர்களைத் தேடிய சுப்பிரமணிய புத்தகசாலை அதிபரின் கண்களிற்பட்டதும், அத்தொழிலையும் ஆர்வத்தோடு செய்தேன். அரசாங்கம் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் எழுத்தாளர் தேவையென விளம்பரஞ் செய்தபோது, பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் பெரிய கந்த சுவாமி தாமே விண்ணப்பத்தை நிரப்பி, என்னிடம் கையெழுத்து வாங்கி அனுப்பினார். பரீட்சையும் நேர்முகப் பரீட்சையும் தாண்டி அரசறிய எழுத் தாளனானேன். இதற்கிடையில் அன்பர் ஆசீர்வாதம் தம் பெயர் நிலவ ஆரம் பித்த அச்சகத்தில் வெளியிட்ட விவேகி என்னும் சஞ்சிகையில் அரசியல் கட்டுரைகள் எழுதினேன். நோத்முதல் கோபல்லவா என்னும் நூல் உருவானது.

சென்ற பன்னிரண்டு ஆண்டுகளாக மில்க்வைற் செய்தி என்னும் சஞ் சிகையைத் தனியொருவனாய் எழுதிவருகிறேன். இருபது ஆண்டுகளின் பின் இன்று சமய கட்டுரைகள் தழைக்கின்றன. பயன்செய்து பாருங்கள் வணக்கம். க. சி. கு.

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம். போன்: 23002